# கிரிக்கட் பார்க்க எம். பி.க்கள் சென்றதால்


Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபாற்பெட்டி எண். 49
போன் 389
National Tamil Daily
மலர் 10
இதழ் 31
தேசிய தினசரி

[illegible] மாசி 29 ஜுல்ஹஜ் 12 செவ்வாய்க்கிழமை (12-3-68)


## சபையில் 'கோரம்' இல்லை

கொழும்பு, திங்கள் ஜனப்பிரதிநிதிகள் சபை இன்று காலை கூடிய சிறிது நேரத்துக்குள்ளாக 'கோரம்' இல்லாதகாரணத்தால் ஒத்திவைக்க நேரிட்டது.

இன்று தனிப்பட்ட அங்கத்தவர் தினமாகும்.

கொழும்பில் இன்று ரோயல் கல்லூரிக்கும் சென். தோமஸ் கல்லூரிக்குமிடையிலான வருடாந்த கிரிக்கெட் விளையாட்டுப் போட்டி ஆரம்பமானது. இப்போட்டியைப் பார்ப்பதற்காக எம். பிக்கள் பலர் சென்றதனால் தான் ஜனப்பிரதிநிதிகள் சபைக் கூட்டம் நடைபெறுவதற்கு தேவையான அங்கத்தவர்கள் சமூகமளிக்க முடியாது போயிற்றென்றும் இதனால் தான் சபைக் கூட்டம் ஒத்தி வைக்க நேரிட்டதென்றும் அறியப்படுகிறது.

## இரண்டு தலை கோழிக்குஞ்சு

யாழ்ப்பாணம், திங். கொட்டடி ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த கா. நாகலிங்கம் என்பவருக்குச் சொந்தமான கோழி ஒன்று இரண்டு தலைகளையுடைய கோழிக்குஞ்சு ஒன்றைப் பொரித்துள்ளது. இவ் அதிசயக்குஞ்சு பொரித்த உடனேயே இறந்துவிட்டதாம்.

# வட கிழக்குப்பகுதிகளுக்கென துரித அபிவிருத்தித் திட்டம்

## 'நம்பிக்கையை மக்கள் வளர்க்க வேண்டும்'

### இந்திய துணைப்பிரதமர் தேசாய் கோரிக்கை

கல்கத்தா, மார்ச் 11 மக்கள், தம்மிடையே நம்பிக்கையையும், மன உறுதியையும் வளர்த்துக்கொள்ள வேண்டுமென இந்திய துணைப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் இங்கு ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறினார். அப்போது தான் நாடும் பல துறைகளிலும் முன்னேற முடியுமென்றார் அவர்.

இந்தியமக்கள் எதிர்நோக்குவது ஒருநம்பிக்கை நெருக்கடியேயாகும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். மக்கள் தம்மீது அதிக நம்பிக்கையை வளர்க்கப் பழகிக் கொள்ள வேண்டுமென்றும் அவர் கூறினார்.

## மாவட்ட சபைகள் அமைத்ததும் பொருளாதார நிபுணர் வகுப்பர்

யாழ்ப்பாணம், செவ். மாவட்டசபைகள் அமைக்கப்பட்டதும் வடக்கு கிழக்கு மாவட்டங்களின் அபிவிருத்திக்கென குறுகிய கால பொருளாதாரத்திட்டமொன்றை வகுப்பதற்கு கட்சி வேறுபாடற்ற, பொருளாதார நிபுணர்களைக் கொண்ட ஓர் ஆலோசனைச் சபையை நிறுவுவதற்கு இப்போதே முயற்சி செய்யப்பட்டு வருவதாக அறியப்படுகிறது.

சிறுகைத்தொழில், குடிசைக் கைத்தொழில் அபிவிருத்தியிலும் உணவு, உப உணவு உற்பத்தியிலும் குறுகிய காலத்தில் அபிவிருத்தி காண்பதற்கான திட்டங்களை இந்த நிபுணர் குழு தயாரிக்குமென்றும் வடக்கு மாகாணத்தில் பணம்பொருள் உற்பத்தியில் அதிக கவனம் செலுத்தப்படுமென்றும் அறியப்படுகிறது. வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த சகல எம். பி.க்களும் உள்ளூராட்சிமன்றத் தலைவர்களும் மற்றும் சமய, சமூக ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும், கல்விமான்கள், பொருளாதார நிபுணர்கள், பல துறைகளிலும் பணியாற்றி ஓய்வுபெற்ற பெரியார்கள் ஆகியோரைக் கொண்ட ஒரு மகாநாட்டை, மாவட்டசபை மசோதா நிறைவேற்றப் பட்டதும் கூட்டி ஆலோசனை செய்து மாவட்டங்களின் துரித அபிவிருத்திக்கு வழிவகுப்பதென்றும் இந்த முயற்சியில் சிலர் இப்போதே ஈடுபடத் தொடங்கியிருப்பதாகவும் அறியப்படுகிறது.

## யாழ். கச்சேரி குமாஸ்தாக்கள் நியமனம்

### தமிழரசுமுன்னணி ஆட்சேபம்

யாழ்ப்பாணம், செவ் யாழ்ப்பாணத்தில் ஒரு தொழிற்கந்தோர் இருந்தும். அங்கு குமாஸ்தாக்களாகப் பதிவு செய்தவர்கள் அநேகர் இங்கிருந்தும் யாழ். அரசாங்க செயலகத்தில் கமத்தொழில் பதவிக்கு கொழும்பில் இருந்து இரண்டு தற்காலிக குமாஸ்தாக்களை நியமித்ததை ஆட்சேபித்து தமிழரசுக்கட்சி வாலிப முன்னணி திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது

சிங்களம் தெரிமென்ற காரணத்திற்காக இவர்கள் இங்கு அனுப்பப்பட்டால், வேறு மொழி தெரியாத இவர்கள் சிங்களத்தை எப்படி இங்கு மொழிபெயர்க்க முடியுமென்றும், ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு பாஷைகளும் தெரியாத இவர்களால் இங்கு எப்படிக் கடமையாற்ற முடியுமென்றும், எனவே வடபகுதி தமிழ்மக்களின் நன்மையைக் கருதி இதில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கடிதத்தின் பிரதி தமிழரசுக்கட்சிப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி.க்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

[கா. நி.]

## வெளிநாட்டு வங்கிகளில் கணக்குவைக்க அனுமதி?

### ஆனால் ஒரு நிபந்தனை

கொழும்பு, திங்கள் வெளிநாட்டு வங்கிகளில் இலங்கையர் கணக்கு வைப்பதற்குத் தடைவிதிக்கும் 1961-ம் வருடத்திய நிதிச்சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறது.

எந்தெந்த வெளிநாட்டு வங்கிகளில் இலங்கையர் கணக்கு வைக்கலாம் என்பதை நிதிஅமைச்சர் தீர்மானித்து அந்தந்த வங்கிகளின் பெயர்களை 'கஸட்' மூலம் அறிவிப்பார். அங்கீகரிக்கப்பட்ட இந்த வங்கிகளில்தான் இலங்கையர் கணக்கு வைக்க அனுமதிக்கப்படுவர். எந்தெந்த வங்கிகளை அங்கீகரிப்பதென்பது பற்றி மத்திய வங்கியின் நாணயச்சபை இப்போது ஆராய்ந்து வருகிறது.

வெளிநாட்டு வங்கிகள் இலங்கைக்கு கடன்வசதிகள் அளிப்பதாக இருந்தால் தான் அவைகளில் இலங்கையர் கணக்கு வைக்க அனுமதிப்பதென்று அரசாங்கம் நிபந்தனை விதித்திருக்கிறது.

[எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 3-ந் திகதி நடைபெறவிருக்கும் மாணவ ஆசிரியர்பரீட்சைக்கான 'பொது அறிவும் உள்ளூர் அறிவும்' மாதிரி வினா விடைகளை 6-ம், 7-ம் பக்கத்தில் பார்க்க]

றொடீஷியாவில்

## மேலும் ஆபிரிக்கர் இருவர் தூக்கிலிடப்பட்டனர்

### ஸ்மித் ஆட்சியின் கொடுமை

லண்டன், மார்ச் 11 றொடீஷிய சட்ட விரோத ஸ்மித் ஆட்சியினர் இன்று மேலும் இரண்டு ஆபிரிக்கர்களை தூக்கிலிட்டனர்.

ஏற்கனவே மூன்று ஆபிரிக்கர்களை ஸ்மித் ஆட்சியினர் தூக்கிலிட்டனர். அதுபற்றி உலகநாடுகள் பலவும் கண்டனம் தெரிவித்தனர். எலிஸபெத் மகாராணியின் உத்தரவையும் மீறி அவர்களை தூக்கிலிட்டனர்.

தூக்கிலிடப்படவிருந்த மேலும் நால்வரின் தண்டனை ஒத்திப்போடப்பட்டுள்ளது. 9 பேரின் தூக்குத்தண்டனை சிறைத்தண்டனையாகக் குறைக்கப்பட்டுள்ளது. இப்பொழுது தூக்கிலிடப்பட்ட இருவரும் கடந்த இரண்டு

(8-ம் பக்கம் பார்க்க)

## 27-வது குழந்தை

லண்டன், மார்ச். 11 லுதியானாவில் 41 வயதான ஒரு பெண்மணி தமது 27-வது குழந்தையை இன்றுபெற்றெடுத்தார். இவருக்கு4 முறை இரட்டைப் பிள்ளைகளும் ஒருமுறை மூன்று குழந்தைகளும் பிறந்திருக்கின்றன.

## சுதந்திரம் பெற்றது

லண்டன், மார்ச். 11 இன்று நள்ளிரவு மொரீஷியஸ்தீவு சுதந்திரம் பெற்றது. பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இதுவரைகாலமும் இயங்கிவந்தது.

## கார் விபத்தில் 7 வயது சிறுவன் பலி

சங்கானை, திங்கள் இளவாலையில் நடைபெற்ற கார் விபத்தில் 7 வயதுச் சிறுவனொருவன் பலியானான். இப்பரிதாப சம்பவம் இன்று மாலை 4 மணியளவில் நடைபெற்றது.

இவ்விபத்தில் சிக்கியவரான இமானுவல் ஜெயகுமார் ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்லப்பட்டபோது அவர் இங்கு மரணமானார்.

இது சம்பந்தமாகத் தொண்டமனாறைச் சேர்ந்தவரான திரு. முத்து பொன்னம்பலம் என்பவர்சங்கானை பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் செலுத்திவந்ததாகக் கூறப்படும் கார் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

மரண விசாரணை அதிகாரி திரு. கனகரத்தினம் மரண விசாரணை நடத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்


## விற்பனைக்கு

சிறந்த நிலையில் உள்ள தும் அரசாங்க உத்தியோகத்தரால் பாவிக்கப்பட்டதுமான E N ஹில்மன் காரி விற்பனைக்கு உள்ளது. 17, கொழும்புத்துறைவீதி, சுண்டிக்குளியில் விசாரிக்கவும். 1792

வீடும் வளவும்

காரியல் கொன்வன்றிற்கு முன் றக்கா றோட்டில் 9-ம் இலக்க வீடும், வளவும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு- ச. அற்புதானந்தன், 26, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 1793

அதிவேகமாய் ஓடக்கூடிய இன்சின் உடன் உள்ள லோஞ்சியும் வேறு இன்ஜின்களும் விற்பனைக்கு உண்டு. கீழ்காணும் விலாசங்களுக்கு தொடர்பு கொள்ளவும். கா. க. சிவலிங்கம், 170, சுங்கா வீதி, திருக்கோணமலை. — பாலர வோடை, காரைநகர். 1797

நாய்க்குட்டிகள்:

நல்ல இனத்தைச் சேர்ந்த பால்குடி மறந்த பூச்சி மருந்து கொடுக்கப்பட்ட ஆறு வார அல்சேஷியன் நாய்க்குட்டிகள். இல. 8, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 1798

## நன்றி கூறுதல்

திரு. F. X. துரைராசா, திருமதி கமலாவதி துரைராசா அவர்களின் கனிஷ்ட புத்திரன் விக்பிறட் பிரேமச்சந்திரனின் ஈமச்சடங்கிற்கு 24-2-68ல் சமுகம் கொடுத்தவர்கள், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்கள், மலர்வளையம் அனுப்பியவர்கள் யாவ ருக்கும் நன்றியைத் தெரிவிக்கிறோம். இல. 4, டேவிட் வீதி, யாழ்ப்பாணம். 1794

## தேவை

இணுவில் ஸ்ரீ காலிங்கன் தியேட்டரில் வேலை செய்வதற்கு பின்வரும் உத்தியோகஸ்தர்கள் தேவை. மனேஜர், டிக்கற் விற்பனையாளர்கள், டிக்கற் சேகரிப்பவர்கள், படம் காண்பிப்பவர்கள், இன்னும் சில பதவிகள். தராதரப்பத்திரம், நற்சாட்சிப்பத்திரங்களுடன் எழுத்து மூலம் 25-3-68க்கு முன் விண்ணப்பிக்கவும். தேர்ந்தெடுப்பவர்கள் பதவிக்கமைய பிணைப்பணம் கட்டவேண்டும். பொ. இராமநாதபிள்ளை, விநாயகா ஸ்ரோர்ஸ், இணுவில். 1795

## கல்வி

பெண்கள் தையலில் பயிற்சி பெறவும் தராதரப் பத்திரம் பெறவும், நவீன விஞ்ஞான முறையில் தையல் கற்பிக்கப்படுகின்றது. மூன்று வகையான நேரங்களில் வகுப்புகள் நடைபெறுகின்றன. [i] மு. ப. 9 — 12 வரை [ii] பி. ப. 2-00 — 5-00 வரை [iii] போயாவும் போயா முன் தினமும் மு. ப. 9-00 — பி. ப. 5-00 வரை. மாதக்கட்டணம் ரூ. 7-50ச. மட்டுமே. விண்ணப்பியுங்கள், அல்லது நேரில் வாருங்கள். கலா தையல் பயிற்சிச்சாலை (சிதா சோடா கொம்பனி அருகே) 330, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 1796

## வைத்தியம்

வாதம், தொய்வு, கெற்பரோகம், குழந்தை வியாதிகள், புண், கட்டு, பிளவை மற்றும் சகல சர்ம வியாதிகட்கும் பூரண சுகம் பெற டாக்டர் செல்வி சிவா வேலாயுதம் அவர்களை 67, பிரதானவீதி, யாழ்ப்பாணத்தில் சந்தியுங்கள். 1790


## மயிலிட்டி - குருநகர் மீனவா பிரச்னை தனிநபர் கமிஷன் ஆராயும்

அளவெட்டி, திங்கள்

குருநகரிலிருந்து வரும் மீன் பிடியாளர் தங்கள் இயந்திர வள்ளங்களை மயிலிட்டியை அடுத்துள்ள கடலில் நங்கூர மிடுவதையும், இக்கடலை அவர்கள் மீன்பிடித் தளமாகப் பயன்படுத்துவதையும் மயிலிட்டி மீனவர்கள் ஆட்சேபிக்கின்றனர் எனத் தெரிய வருகிறது.

இதுபற்றிய விசாரணையை நடாத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு கைத்தொழில் கடற்றொழில் அமைச்சர் திரு. என். கிருஷ்ணதாசனை தனிநபர் கமிஷனராக நியமித்துள்ளார். இது சம்பந்தப்பட்ட விஷயங்களைக் கடற் தொழில் இயக்குநர் அலுவலகம் எஸ் என் கினை, தபாற் பெட்டி, 531, காலிமுகம், கொழும்பு 3 என்ற விலாசத்துக்கு இம்மாதம் 16-ம் திகதிக்கு முன்னதாக பதிவுத் தபாலில், அறியத் தருமாறு கோரப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.


### NOTICE

Wanted for a NURSING HOME in JAFFNA town a Nurse, Midwife and a female attendant. Also educated youths with knowledge of English for training in Dispensary work and subsequent employment if found suitable. Apply with details C/o Eelanadu. Advt. No. 1784.

1784

மறக்க முடியாத

2வது மாதம்!

நியூ காலிங்கன்

(இணுவில்)

தினசரி 6-30, 9-30 மணி

தினசரி 2-30 க்கு மெற்னி

எஸ். எஸ். ராஜேந்திரன்

காஞ்சனா - தேவிகா

முத்துராமன் - சோ

நடித்த

மறக்க முடியுமா?

REGAL JAFFNA

Daily at

4-40, -700, & 9-45 p.m

Stewart Granger & Mid Massini

In

The Secret Invasion

Color by De Luxe and Panavision

MANOHARA

JAFFNA

Daily at 4-45,7-00, 9-45p.m

Chrisopher Lee

in

DRACULA

Prince of Darkness

79வது தினம்!

ராஜா

(யாழ்ப்பாணம்)

தினசரி 3-30, 6-30, 9-30

போயாதினமிலிக்காட்சி

எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா


நடித்த

காவல்காரன்

இப்பொழுது திரையிடப்படுகிறது!

இன்ஸ்லி (கொழும்பு) — பிளாசா (வெள்ளவத்தை) — வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

விஜயா (மட்டுநகர்) — ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) — விஜிதா (ஹட்டன்)



சிவாஜி கணேசன்— சாவித்திரி

ஜெமினி கணேசன், பத்மினி,

கே.ஆர்.விஜயா, தேவிகா, நாகேஷ்

மற்றும் பலர் [நடிக்கும்]

சரஸ்வதி சபதம்

(ஈஸ்ட்மென் கலர்)


# செய்திச் சுருக்கம்

## ஓட்டுத் தொழிற்சாலை

ஓட்டிசுட்டானில் நிறுவப்பட்டுள்ள ஓட்டுத்தொழிற்சாலையின் இயக்க வேலைகள் ஆரம்பமாகவிருக்கின்றன. வவுனியா பாராளுமன்ற உறுப்பினர் திரு. தா. சிவசிதம்பரம் விடுத்தவேண்டுகோளின்படியே கட்டிட வேலைகள் யாவும் பூர்த்தியாகி ஆரம்பிக்கப்படாதிருந்த இந்த ஓட்டுத்தொழிற்சாலை இப்பொழுது இயங்கத் தொடங்கியுள்ளது. இத்தொழிற்சாலையை அடுத்த மாதம் கைத்தொழில் மந்திரி திரு. பிலிப் குணவர்த்தன திறந்துவைப்பார்.

## தொழிலாளர் கஷ்டம்

கடந்த பெப்ரவரி முதல் பீடித்தொழிலாளர் வேலையின்றித் தவிக்கின்றனர். இவர்களுக்கு வேலைவாய்ப்பு செய்துகொடுப்பதற்காக பீடிப் புகையிலைகளை ஐக்கிய பீடி கூட்டிறவுச் சங்கத்திற்காவது கொடுத்துதவ முயற்சி செய்யுங்கள்.'' இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றைப் புத்தளம் ஐக்கிய கூட்டுறவுச் சங்கத்தலைவர் பிரதமருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

## பதுக்கினால் தண்டனை

அரிசியை அல்லது நெல்லைச் சட்டவிரோதமாகப் பதுக்கி வைத்து நாட்டில் செயற்கையான அரிசித்தட்டுப் பாட்டை ஏற்படுத்துவோருக்கு சிறைத்தண்டனை விதிப்பதற்கான சட்டம் ஒன்றை இயற்றுவதற்கு உணவு விவசாய அமைச்சு இப்போது ஆலோசனை நடத்திவருகிறது.

## கொள்ளை லாபம்

உள்ளூரில் தயாரிக்கப்படும் பொருட்கள் கொள்ளை விற்பனைக்கு விற்கப்படுகின்றன. இதனால் புதிய கைத்தொழில் உரிமையாளர்கள் பெரும் லாபம் அடைகிறார்கள். அத்துடன் இவர்களது லாபத்துக்கு வரி விலக்கும் அளிக்கப்படுகிறது.

இவ்வாறு தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கைத்தொழில் மந்திரி திரு. பிலிப் குணவர்த்தனவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## பிரதமருக்கு மகஜர்

உத்தேச மாவட்டசபையால் வடக்குக் கிழக்கு மாகாணத்தைச்சேர்ந்த சிறுபான்மைத் தமிழர்களுக்கு அதிக பாதகம் ஏற்படும் என்றும், எனவே உத்தேச மாவட்டசபையைக் கொண்டுவரவேண்டாமெனக்கோரியும், இலங்கை ஹரிஜன மகாசபை, பிரதமர் டட்லி சேனநாயக்காவிற்கு நீண்ட மகஜரொன்றை அனுப்பி வைத்துள்ளது.

## கல்வி அமைச்சு முடிவு

சகல அரசாங்க பாடசாலை அதிபர்களுக்கும் பாடசாலை நிர்வாகத் துறையில் பயிற்சி அளிப்பதற்கு கல்வி அமைச்சு முடிவுசெய்துள்ளது. பாடசாலைகளில் புதியபோதனாமுறைகளைப் புகுத்துவதற்கும் திறமைமிக்க நிர்வாக முறைகளை அமுல்நடத்துவதற்கும்இப்புதிய பயிற்சி திட்டம் கல்வி மந்திரியினால் உருவாக்கப்பட்டுள்ளது.

## மனேஜர் மரணம்

ஆலிஎலை நுவரேலியா பாதையில் டீன்ஸ்லண்ட் சந்திக்கருகில் தராசுபடிக்கல் கம்பெனியான அவெரிஸ்தான பதுளைக் கிளை ஜீப் அலை கீழாக புரண்டது. பதுளைக் கிளையின் மனேஜரான ஓ. புர்மன் பதுளை பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார். இவருடன் பிரயாணம் செய்த ஏ. பியதாச, என் டயஸ், ஜே. விஜேசிங்க. எஸ். அருணேந்திரன், எஸ். ஓ. பெரேரா, பார்ட்டி அந்தனி ஆகியோர் பதுளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## இ. போ. ச.விற்கு நஷ்டம்

கடந்த ஒன்பது வருடகாலமாக விதிவிபத்துகளால் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு நாற்பது லட்சத்து 78597 ரூபா செலவேற்பட்டிருக்கின்றது, சபைத் தலைவர் திரு. டி. டி. சில்வாவிற்குசமர்ப்பிக்கப்பட்டிருக்கும் ஒரு அறிக்கையில் சபையின் ஆராய்ச்சிப் பிரிவு இத்தகவலை தெரிவித்திருக்கிறது. இத்தொகையில் இ. போ. ச.வுக்கு ஏற்பட்ட ஆட்பல நஷ்டமும் பஸ்கள் விபத்து காரணமாக ஓடாததனால் ஏற்பட்ட நஷ்டமும் சேர்க்கப்படவில்லை.


இறைவன் திருமேனியில்

சந்தனக் காப்பிட்டு

அலங்கரிக்க மிகவும் உகந்த

பச்சை சந்தனம்

உடனுக்குடன் அரைத்துக் கொடுக்கிறோம்.

என்றும் எங்களிடம் கிடைக்கும்

சுந்தரம் பிரதர்ஸ்

கோவில் அபிஷேகப் பொருட்கள்

மருந்துச்சரக்கு விற்பனையாளர்

73, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.

மட்டக்களப்பு ஆனைப்பந்தி

பிள்ளையார் கோவில்

பிரம்ம ஸ்ரீ வி. வரதராசக் குருக்கள்

எழுதுவது:

அன்புடையீர்,

நீங்கள் அனுப்பி வைக்கும் பச்சைச் சந்தனம் சுத்தமானதாகவும் நறுமணமுள்ளதாகவும், தூய்மையாகவும் இருக்கிறது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஆனைப்பந்தி பிள்ளையாருக்குச் சந்தனக்காப்புச் சாத்தி பணிந்து அருள் பெறுகிறார்கள் அடியார்கள். உங்கள் சேவை தொடர்ந்து நடந்துவர வேண்டுமென்று எல்லாம் வல்ல சித்தி விக்னேஸ்வரனை வேண்டுகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியட்னமுக்கு 2 லட்சம் அமெரிக்க துருப்புகள்

## அனுப்பும் கோரிக்கை

## அமெரிக்க வெள்ளை மாளிகை செய்தியை மறுத்துள்ளது

வாஷிங்டன், மார்ச் 11
வியட்னமுக்கு மேலதிகமாக 2 லட்சம் அமெரிக்கத் துருப்புகளை அனுப்புமாறு வியட்னமிலுள்ள அமெரிக்கப் படைகளின் தளபதி ஜெனரல் வெஸ்மோர்லாண்ட் அமெரிக்க அரசாங்கத்தை கேட்டுக்கொண்டுள்ளார் என்ற செய்தியை, வாஷிங்டனிலுள்ள வெள்ளை மாளிகை மறுத்துள்ளது.

இந்தக் கோரிக்கையை அமெரிக்க முப்படைத் தளபதி ஜெனரல் வீலர் தெரிவித்ததாக நேற்று அமெரிக்கப் பத்திரிகைகள் கூறியிருந்தன. ஜெனரல் வீலர், அண்மையிற் தான் தென் வியட்னமுக்கு விஜயம் செய்து, ஜெனரல் வெஸ்ட் மோர்லாண்டைச் சந்தித்துப் பேசிவிட்டு அமெரிக்கா திரும்பினார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஜெனரல் வெஸ்ட் மோர்லாண்ட் மேலும் 2 லட்சம் அமெரிக்கத் துருப்புகள் வேண்டுமெனக் கோரிய செய்தியை மறுத்த வெள்ளை மாளிகை அதிகாரிகள், அமெரிக்க ஆட்சி நிர்வாகத்தைச் சேர்ந்த சில சிரேஷ்ட அதிகாரிகளே, மேலதிக துருப்பு கோரிக்கை பற்றித் தகவலை இரகசியமாக வெளியிட்டுள்ளனர் என்றும், வியட்னமுக்கு மேலதிக துருப்புகளை அனுப்பும் திட்டத்தை எதிர்த்துப் பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்கவே இவ்விதம் அவர்கள் செய்துள்ளனர் என்றும் தெரிவித்தனர்.

## ஜெனரல் வெஸ்ட் மோர்லாண்ட் கடும் சண்டை எதிர்பார்க்கிறார்

சைகோன், மார்ச் 11
இதற்கிடையில், சைகோனின் வடமாகாணங்கள் இரண்டில் கடும் சண்டையைத்தாம் எதிர்பார்ப்பதாக ஜெனரல் வெஸ்ட் மோர்லாண்ட் கூறியுள்ளார்.

இம்மாகாணங்களைச் சுற்றியுள்ள வட வியட்னாம் துருப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். ஆகவே தான் இம் மாகாணங்களில் வடவியட்னாமியரின் கடும் தாக்குதலை தாம் எந்நேரமும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக ஜெனரல் வெஸ்ட் மோர்லாண்ட் மேலும் குறிப்பிட்டார்.

சைகோனில், இரண்டு அமெரிக்கத் தளங்கள் மீது நேற்று வியட்கொங்கியர் ரொக்கெட் தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலில், ஆயுதக் கிடங்கொன்றும், எண்ணெய்க்கிடங்கொன்றும் அழிக்கப்பட்டன.

## குண்டு வீச்சை அமெரிக்கா நிறுத்த வேண்டும்

வாஷிங்டன், மார்ச் 11
அமெரிக்க செனேட்டரும் காலஞ்சென்ற அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எவ். கென்னடியின் சகோதரருமான திரு. றொபேட் கென்னடி வட வியட்னாம் மீது அமெரிக்கா குண்டுவீசுவதை நிறுத்துவதுடன், வடவியட்னாமியருடன் பேச்சுவார்த்தைகளிலும் இறங்குவதன் மூலமே வியட்னாமில் சமாதானத்தை நிலைநாட்டலாமென்ற தமது கருத்தை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

நேற்றிரவு இங்கு ஒலிபரப்பப்பட்ட ஒரு டெலிவிஷன் பேட்டியின் போதே திரு. கென்னடி இவ்வாறு கூறினார்.

அத்துடன் மக்களிடம் பொறுப்புள்ள ஓர் அரசாங்கத்தைத் தென்வியட்னாமியர் நிறுவ அமெரிக்கா முயற்சி செய்யவேண்டுமென்றும் திரு. கென்னடி குறிப்பிட்டார்.

## டோக்கியோவில் ஆர்ப்பாட்டம்

### 200 பேர் கைது

டோக்கியோ, மார்ச் 11
டோக்கியோவில் நேற்று மாணவர், விவசாயிகளுக்கும் பொலிசாருக்குமிடையே நடைபெற்ற சண்டையில் ஏறத்தாழ 500 பேர் காயமுற்றனர். பொலிசார் 200 பேரைக் கைதுசெய்தனர்.

டோக்கியோவுக்கு வடகிழக்கே ஒரு புதிய விமான நிலையம் நிறுவப்படுவதை எதிர்த்தே மாணவர்களும், விவசாயிகளும் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இந்த விமான நிலையம், வியட்னாம் போரில் பங்குபற்றும் அமெரிக்க விமானங்களினால் பயன்படுத்தப்படலாமென்பதை எதிர்த்தே மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். விவசாயிகளோ புதிய விமான நிலையம் நிறுவப்படுவதால் தமது நிலம் பறிபோகிறதே என்பதை ஆட்சேபித்து இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனரெனக் கூறப்படுகிறது.

### இலங்கைக்கு பிரிட்டிஷ் "பூங்கா" தொழிலாலை

லண்டன். மார்ச், 11
இலங்கையில் வெகு விரைவில் "பூந்தோட்டம்" சூழ்ந்த தொழிலாலை ஒன்று தாபிக்கப்படக்கூடும். இந்த அசாதாரண யோசனையைக் கூறியவர் இம்மாதம் இலங்கைக்கு விஜயஞ்செய்யவிருக்கிறார். அவர்தான் பிரபல பிரிட்டிஷ் பல்வித தூரிகை உற்பத்தியாளரான எல். ஜி. ஹரிஸ் அண்ட் கம்பனி லிமிடெட்டின் அதிபரான திரு. எல். ஜி. ஹரிஸ்.

மார்ச் 20-ந் திகதி திரு. ஹரிஸ் இலங்கை வருகிறார். தனது கம்பனியின் கொள்கையின்படி, இலங்கையின் கிராமிய எழிற் சூழலில் தொழிலாலை ஒன்றை அமைத்து தூரிகைகளை உற்பத்தி செய்வதே அவர் நோக்கம். இதற்கான இடத்தை தேர்ந்தெடுக்கவே திரு. ஹரிஸ் இலங்கை வருகிறார்.

இங்கிலாந்து, வூஸ்டர்ஷயரில் இருக்கும் அவரது தலைமைத் தொழிற்சாலையில் ஒவ்வொரு வருடமும், சர்வதேசக் கலைவிழா இயற்கைச் சூழலில் இடம்பெறுகிறது. இதனைத் தொடர்ந்து, உலகின் பல பாகங்களில் பூங்காவுடனான ஹரிஸ் தொழிலாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வருட முடிவில் இலங்கை ஆலை உற்பத்தியை ஆரம்பிக்குமெனவும், ஆரம்பத்தில் விற்பனைகள் இலங்கையிலே இருக்குமெனவும், பின்னர் இலங்கை ஆலையின் உற்பத்திகள், மற்றைய நாடுகளுக்கு ஏற்றுமதியாகுமெனவும், திரு. ஹரிஸ் கூறியிருக்கிறார்.

புதுடில்லியில்

### திபேத்தியர் ஆர்ப்பாட்டம்

புதுடில்லியில், மார்ச் 11
புதுடில்லியில் கூடிய 15,000 திபேத்தியர், தமது நாட்டைச் சீனாவின் கைகளிலிருந்து விடுவிப்பது என்று உறுதி பூண்டுள்ளனர்.

முன்னதாக, தமது நாடு சீன ஆதிக்கத்திலிருப்பதை எதிர்த்தும், திபேத்திய-இந்திய நட்புறவை ஆதரித்தும் அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

### மா ஆதரவாளர்

பீகிங், மார்ச், 11
சீனத்தலைவர் திரு. மாசே துங்கின் ஆதரவாளர்கள், 16 சீன வட கிழக்கு மாகாணங்களில் 15 மாகாணங்களின் அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## சர்வதேச சமுத்திர ஆராய்ச்சி ஆலோசனை

### ஜோன்சன் வெளியிட்டார்

வாஷிங்டன், மார்ச் 11
உலகின் சமுத்திரங்களிலுள்ள செல்வத்தையும், மூலதனங்களையும் 1970-ம் ஆண்டிலிருந்து ஒரு சர்வதேச சமுத்திர ஆராய்ச்சி சகாப்தத்தை ஆரம்பிப்பதன் மூலம் சிறப்பாகப் பயன்படுத்தலா மென்ற ஆலோசனையை அமெரிக்க ஜனாதிபதி ஜோன்சன் வெளியிட்டுள்ளார்.

'சமுத்திரத்தின் ஆழத்தில் எண்ணற்ற செல்வம் இருக்கிறதென்பதையும், அவை எல்லா நாட்டு மக்களினதும் வாழ்க்கையை அபிவிருத்தி செய்யப் பயன்படுத்தப்படலாம் என்பதையும் நாம் அறிவோம்' என்று திரு. ஜோன்சன் கூறியுள்ளார்.

றொடீஷியா

## 6 ஆபிரிக்கர்களின் மரண தண்டனை

### மன்னிப்புபற்றி மந்திரி சபைவிவாதம்

சலிஸ்பரி, மார்ச் 11
றொடீஷியாவின் சட்ட விரோத ஆட்சியின் பிரதமர் திரு. அயான் ஸ்மித், இன்று தூக்கிலிடப்படவிருந்த 6 ஆபிரிக்கர்களுக்கு மன்னிப்பு அளிப்பது பற்றித் தமது மந்திரி சபையின் ஓர் அவசர கூட்டத்தில் ஆலோசித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த 6 ஆபிரிக்கர்களுக்கும் மன்னிப்பு அளிக்குமாறு ஸ்மித் ஆட்சியினரிடம் பாப்பரசர் விடுத்த கோரிக்கையைத் திரு. ஸ்மித்தும், அவரது மந்திரிகளும் ஆராய்ந்ததாகக்கூறப்படுகிறது.

ஆனால் மந்திரிசபை விவாதத்தின் பின் எவ்வித முடிவும் அறிவிக்கப்படவில்லை. ஆறு ஆபிரிக்கர்களினதும் வழக்கறிஞர்களுக்கும் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 6 பேரில், 4 பேர் குண்டு வீசிய குற்றம் சுமத்தப்பட்டவர்களாவர்.

'பியூப்லோ' விவகாரம்

## அமெரிக்கா மன்னிப்பு கோரினால் தயவு

### சிப்பந்திகளிடம் காட்டப்படும் என்கிறது வட கொரியா

பியோங்யாங், மார்ச் 11
வடகொரியா கைப்பற்றிய அமெரிக்க உளவுக் கப்பல் 'பியூப்லோ' விவகாரம் பற்றிக் குறிப்பிடுகையில், அமெரிக்கா மன்னிப்புக் கோரும் பட்சத்தில், கப்பல் சிப்பந்திகளிடம் தாம் ஓரளவு தயவாக நடந்துகொள்ளலாமென வடகொரியா அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் உளவு நடவடிக்கைகளை வெகுவாகக் கண்டித்த வடகொரியா, 'பியூப்ளோ' சிப்பந்திகளுக்கு எப்படியும் தண்டனை வழங்கப்படுமென்று தெரிவித்துள்ளது.

இத்தகவலை பியோங்யாங் ரேடியோ ஒலிபரப்பியது.

மேற்கு ஆசியா

## இஸ்ரேல் வெளியுறவுமந்திரி எபானை ஜாரிங் சந்தித்தார்

ஜெருசலம், மார்ச் 11
மேற்கு ஆசியாவிலுள்ள ஐ. நா. விசேஷ பிரதிநிதி டாக்டர் குனார் ஜாரிங், இஸ்ரேல் வெளியுறவு மந்திரி திரு. எபானை நேற்று ஜெருசலத்தில் சந்தித்துப் பேசினார்.

'அரபு நாடுகளும், இஸ்ரேலும், ஒரு மூன்றும் நாட்டில், இயலுமென்றால், சைப்பிரஸில் கூடிப்பேசலாம் என்ற தமது ஆலோசனையை ஐக்கிய அரபுக் குடியரசு நிராகரித்துவிட்டதாக டாக்டர் ஜாரிங், திரு. எபானிடம் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

டாக்டர் ஜாரிங், இம்மாத இறுதியில், ஐ. நா. காரியதரிசி யூ தாண்டிடம் தமது மேற்கு ஆசிய சமாதானவிஜயம்பற்றிப் புதிய அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்கவிருக்கிறார்.

யூதாண்ட்

இதுபற்றி யூதாண்ட், நியூயோர்க்கில் குறிப்பிடுகையில், இந்த அறிக்கை டாக்டர் ஜாரிங்கிடமிருந்து தமக்குக் கிடைத்ததும், அதை அவர் ஐ. நா. பந்தோபஸ்து சபையில் சமர்ப்பிக்கப் போவதாகக் கூறினார்.

லண்டனிலுள்ள

## இந்திய தூதரகம் முன்னால் ஆர்ப்பாட்டம்

லண்டன், மார்ச் 11
நேற்று, லண்டனிலுள்ள இந்திய தூதரகம் முன்னால், 3,000க்குமதிகமான இந்தியர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

பிரிட்டிஷ் பாஸ்போர்ட் உள்ள ஆசியர்களைப் பிரிட்டனுக்குள் வருவதைத் தடை செய்யும் பிரிட்டிஷ் குடியேற்றச் சட்டத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம்செய்த அவர்கள் சாம்ராஜ்ய நாடுகள் சங்கத்திலிருந்து இந்தியா விலக வேண்டுமெனக் கோரினர்.

அத்துடன், றொடீஷியாவில் பலாத்காரத்தைப் பிரயோகிக்குமாறு அவர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தங்கள் நயத்தின் பொருட்டு மாத்திரம் அன்றி பிறர் நயத்தின் பொருட்டும் பிரயாசப் படுகின்றவர்களே உத்தமர்.

— நாவலர் பெருமான்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க வருஷம் மாசி மாதம் 29ம் திகதி [12-3-68]

## பொறுப்புடன் நடக்கவில்லை

ஜனப்பிரதிநிதிகள் சபை நேற்றுக் காலை கூடிய சிறிது நேரத்துக்குள்ளேயே 'கோரம்' இல்லாததால் ஒத்தி வைக்க நேரிட்டதும் இப்படியான நிலைமை ஏற்பட்டதற்குக் கூறப்படும் காரணமும் நமது பிரதிநிதிகள் நிச்சயம பெருமைப்படக் கூடியதல்ல.

கொழும்பில் நேற்று ஆரம்பமான இரு பெரிய கல்லூரிகளுக்கிடையிலான பெரும் 'கிரிக்கெட்' விளையாட்டுப் போட்டியைக் கண்டு களிப்பதற்காக மக்கள் பிரதிநிதிகள் பலர் சென்றதுதான், சபையில் கூட்டத்தை நடத்துவதற்குத் தேவையான அங்கத்தவர்கள் சமுகமளிக்காததற்கும் அலுவல்களைக் கவனிக்க முடியாமல் சபைக்கூட்டம் ஒத்திவைக்கப்படுவதற்கும் காரணமாம். 'கிரிக்கெட்' விளையாட்டுப் போட்டியைப் பார்த்து ரசிப்பதற்கோ வேறு பொழுது போக்கு நிகழ்ச்சிகளுக்கோ நமது தலைவர்களும் பிரதிநிதிகளும் போகக் கூடாதென்று நாம் கூறவில்லை. மக்களுக்காகச் சேவை செய்யும் மக்கள் பிரதிநிதிகளுக்கு ஓய்வும் தேவை. சிறிது நேரம் அமைதியாகப் பொழுதைக் கழிக்க வேண்டியதும் அவசியம் தான். ஆனால் நாட்டின் முக்கிய வேலைகளைக் கவனிக்கவும் மக்களுக்குப் பல தொல்லைகள் ஏற்பட்டுள்ளதால் அவர்களின் குறைநிறைகளை ஆராய்ந்து அவர்களுக்கு நிவாரணம் அளிக்கவும் வேண்டியுள்ள இந்த அவசியமான சமயத்தில், பிரதிநிதிகள்சபைக்கு பிரதிநிதிகள் செல்லாதிருந்தால் பிரதிநிதுகள் தமது கடமையில் தவறியவர்களாக மாட்டார்களா? நாட்டு மக்களுக்கு இன்று போல வேறு எப்போதும் குறைகள் இவ்வளவு தொகையாக இருந்ததில்லை. இச்சமயத்தில் பிரதிநிதிகள் மக்களின் குறைகளை ஆராய்ந்து அவற்றுக்கு நிவர்த்தி தேட வேண்டியது மிக மிக அவசியமான கடமை. நேற்றையதினம் ஜனப் பிரதிநிதிகள் சபையைப் பொறுத்தவரையில் தனியார் தினமாகும். தனிப்பட்ட அங்கத்தவர்கள் தங்கள் தொகுதிகளின் குறைநிறைகள் பற்றியும் அரசாங்கம் செய்யத் தவறிய அலுவல்களை எடுத்துக் காட்டவும் சந்தர்ப்பம் கிடைக்கும் தினம் இது. இத்தினத்தை அவசியமற்ற ஒரு தினமாக ஆளும்கட்சி அங்கத்தவர்கள் மட்டுமல்ல எதிர்க்கட்சியினருமே கருத முடியாது. நேற்றைய சபைக் கூட்டம் 'கோரம்' இல்லாமல் ஒத்திவைக்கப்பட்டது இலங்கையின் சரித்திரத்தில் புதிதல்லவென்றாலும் நாடு நெருக்கடியான கட்டத்திலிருக்கும் போது மக்கள் பொறுப்புடனும் கடமையுணர்ச்சியுடனும் நடந்து கொள்ள வேண்டுமென உபதேசம் செய்யும் நமது தலைவர்களினதும் பிரதிநிதிகளினதும் பொறுப்புணர்ச்சிக்கும் கடமையுணர்ச்சிக்கும் இது எடுத்துக்காட்டாக விளங்க முடியாது.

# மொழிப்பிரச்சினையைத் தீர்க்க தமிழகக் கட்சிகள் முயற்சி

பங்களூர், மார்ச் 11

மொழிப்பிரச்சினையை ஒன்று கூடிப் பேசித் தீர்க்கத் தமிழக அரசியற் கட்சித் தலைவர்கள் எடுத்துள்ள முதல்முயற்சியை இந்தியமத்திய தகவல், ஒலிபரப்பு மந்திரி திரு. கே. கே. ஷா பாராட்டியுள்ளார். பங்களூரில் நேற்று நிருபர்களிடம் பேசுகையிலேயே திரு. ஷா தமது பாராட்டைத் தெரிவித்தார்.

நாடெங்கும் உற்பத்திப் பெருக்கம் ஏற்பட்டு வருவதால், மொழிப்பிரனைக்கு விரைவிலேயே தீர்வு ஏற்படுமென்று திரு ஷா நம்பிக்கை வெளியிட்டார். மொழிப்பிரச்சினை நீண்டகால சர்ச்சைக்குரிய ஒரு பிரச்சினை அல்லவென்றும் மந்திரி குறிப்பிட்டார்.

தமிழக மக்கள் ஆங்கிலத்துடன் மற்றைய மொழிகளையும் படிப்பதால் அவர்கள் நன்மையடைவார்கள் எனவும் திரு. கே. கே. ஷா கூறினார்.

## சுதந்திரக் கட்சியின் நிர்வாகக்குழு அறிக்கை

இதற்கிடையில் சென்னையில் கூடிய சுதந்திரக்கட்சி நிர்வாகக்குழு, தமிழக அரசாங்கத்தின் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்து தமது இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைக் கைவிட்ட மாணவர்களுக்குத் தனது பாராட்டைத் தெரிவித்துள்ளது. அத்துடன் இந்திச் சினிமாப் படங்களை எதிர்ப்பதைக் கைவிடுமாறும் அது மாணவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

தமிழக அரசாங்கத்தின் இரு மொழித் திட்டத்தை வரவேற்றுள்ள நிர்வாகக் குழு கல்லூரிகளிலும், நீதிமன்றங்களிலும் தமிழைப் புகுத்துவதன் மூலம் மாணவர்களுக்கு வெளிநாடுகளில் படிக்கும் வாய்ப்புக் கிட்டாது விடுமென்ற தனது முன்னைய எச்சரிக்கையையும் சுதந்திரக்கட்சி நிர்வாகக்குழு மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

மொழிப்பிரச்சினையையிட்டு எல்லா அரசியற் கட்சிகளும் கூடி ஒரு சுமுகமான தீர்வுக்கு வரும்வரை 1959 — 60-ம் ஆண்டில் நிலவிய நிலைமையே நீடிக்க வேண்டுமெனக் கோரி அமைதியான கிளர்ச்சி ஒன்றை நடத்துமாறு நிர்வாகக் குழு மற்றைய எதிர்க்கட்சிகளைக் கேட்டுக்கொண்டுள்ளது.

## 'நாட்டின் கல்விக்கு ஆசிரியர்களே பொறுப்பு'

உரும்பராய், திங்கள்

'ஆசிரியர்கள் இந் நாட்டின் கல்விக்குப் பொறுப்பானவர்கள் ஆசிரியர்களுக்குரிய கஷ்டங்களை வித்தியாதிகாரிகள் எல்லோரும் அறிய மாட்டார்கள். ஆசிரியர்களாகக் கடமையாற்றிய பின்னர் வித்தியாதிகாரிகளாக வந்தவர்கள் ஓரளவுக்கு ஆசிரியர்களது கஷ்ட, நஷ்டங்களை உணரக் கூடியவர்களாக இருக்கிறார்கள்.

இவ்வாறு வட இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவர் பண்டிதர் ச. பொன்னுத்துரை, கோப்பாய் வட்டார வித்தியாதிகாரியாகக் கடமையாற்றி வவுனியாவுக்கு மாற்றலாகிச் செல்லும் திரு. க. நவரத்தினத்தின் சேவையைப் பாராட்டு முகமாக வலிகாமம் கிழக்குத் தமிழ் ஆசிரியர் சங்க நிர்வாக சபையின் சார்பில் நடைபெற்ற உபசார வைபவத்தில் பேசுகையில் கூறினார்.

திரு. பொன்னுத்துரை நவரத்தினத்தின் சேவையைப் பாராட்டிப் பேசியதோடு கோப்பாய் வட்டாரத்துக்குப் புதிய வித்தியாதிகாரியாக வந்துள்ள திரு. வே. சண்முகநாதனை வரவேற்றார்

வலிகாமம் கிழக்குத் தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. க. இ. குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இவ்வுபசார வைபவத்தில் கோப்பாய் வட்டார வித்தியாதிகாரி திரு. வே. சண்முகநாதன், ஆசிரியர்கள் ஜே. ஐ. தம்பிையா, க. மார்க்கண்டு, திருமதி. வேதவல்லி கந்தையா, வலிகாமம் கிழக்கு தமிழ் ஆசிரியர் சங்க செயலாளர் திரு. அ. பஞ்சாட்சரம் உட்பட பலர் திரு. க. நவரத்தினத்தின் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

தமக்குத் தெரிவிக்கப்பட்ட பாராட்டுக்கு திரு. க. நவரத்தினம் நன்றி கூறினார்.

பண்டிதமணி சி. கணபதிபிள்ளையின் படைப்பான ஈழத்து இலக்கியவழி என்னும் நூல் திரு. க. நவரத்தினத்திற்கு ஞாபகப் பரிசிலாக அளிக்கப்பட்டது.

## பழைய மாணவர் கூடுவர்

காரைநகர், செவ்வாய்

காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை பழையமாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நாளைமாலை மேற்படி பாடசாலையில் நடைபெறவிருக்கிறது.

வித்துவான் கே. முருகேசன், வித்துவான் மு. சபாரத்தினம் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றவிருக்கின்றார்கள்.

## புதிய உபதலைவர்

புலோலி, திங்கள்

பருத்தித்துறை நகரசபைக்கு 68-ம் ஆண்டுக்கான புதிய உபதலைவராக ஆறும் வட்டார அங்கத்தவர் திரு. எம். மரியாம்பிள்ளை ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். [illegible] திரு. வே. [illegible] நாதன் [illegible] வசித்தார்.

## சங்கீதப்போட்டி முடிவுகள்

உடுப்பிட்டி, திங்கள்

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய இல்லங்களுக்கிடையே நடைபெற்ற சங்கீதப் போட்டிமுடிவுகள்பின் வருமாறு:-

கீழ்ப்பிரிவு (ஆண்கள்):- எம். அருட்செல்வம், கே. சப்தகிரிநாதன், எம். ஈஸ்வரகுமார், சிரேஷ்டபிரிவு:- கே. குலசேகரம், ரீ. கலாமணி, எஸ். சிவ சுப்பிரமணியம், (குழுப்பாடல்) கனிஷ்டபிரிவு வள்ளுவன், பாரதி, கம்பன், சிரேஷ்ட பிரிவு:- கம்பன், வள்ளுவன். இளங்கோ.

கீழ்பிரிவு (பெண்கள்) :- வி. கே. கமலினி, கே. பத்மாசனி, ஐ. பூபாவதி, சிரேஷ்ட பிரிவு:- எஸ். சந்திரா, கே. யோகம்மா, எஸ். சரோஜினி தேவி, (குழுப்பாடல்) கீழ்ப் பிரிவு:- கம்பன், இளங்கோ, வள்ளுவன், மேற் பிரிவு:- வள்ளுவன், பாரதி, கம்பன்.

## இன்றைய பலன்

[12-3-68]

செவ்வாய்க்கிழமை

[மாசி மீ 29உ]

திதி- திரியோதசி பின் இரவு 3-47

நட்சத்திரம்- ஆயிலியம் இரவு 6-34 மேல் மகம்.

ராகுகாலம்- 3-28— 4-53.

சுபநேரம் 10-53 — 12-23.

இன்று பிறந்ததர்களுக்கு-புதுமை எண்ணங்கள் மலரும். வாழ்க்கையில் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்படும். வயதுமுதிர்ந்தவர்களின் மறைமுகமான எதிர்ப்புக்கு இலக்காக நேரிடும். இவ்வருடம் நீர் எடுக்கும் நடவடிக்கைகள் உடனடியாகப் பலன் தராவிடினும், பிற்பகுதியில் அமோக ஆதரவைப் பெறும். காதல் உலகில் தோல்விக்கு இடமுண்டு. மாணவர்கள் வெளியுலகச் சிந்தனைகளுக்கு இடமளியாது கல்வியில் அதிக கவனம் செலுத்தவும். தன்னம்பிக்கை வளரும்.

மேஷம்- தந்தை சொல் மிக்க மந்திரமில்லை

ரிஷபம்- புதினம் கேட்பீர், புதுமையில் நாட்டம்

மிதுனம்- பொருள் வரவு, பொதுசனத் தலைமை

கடகம்- அவசரமுடிவு, அமைதிக்கு வேட்டு

சிம்மம்- வாழ்க்கையில் புயல், வரவும் தடைபடும்

கன்னி- நிதியில் அபிவிருத்தி, நிம்மதி பிறக்கும்

துலாம்- தூக்கம்கெடும் துன்பம் அணைக்கும்

விருச்சிகம்- அன்னையின் ஆசி, அனைத்திலும்வெற்றி

தனுசு- அறவழி நாட்டம், தாராள மனம்

மகரம்-கழுகுப்பார்வை கவலையின் தாக்குதல்

கும்பம்- இல்லற பூங்காவில் இளந் தென்றல் வீசும்

மீனம்- வியாபார மந்தம், வேதனைக்கிடம்

— சோதிடக்கலாநிதி —
திருமலை வேலுப்பிள்ளை

## நாட்டிலும் நகரிலும்

கொழும்பு மாநகரில் ஆண்டு தோறும் நிகழும் ஒரு கோலாகலமான திருவிழா நேற்றும் இன்றும் நடக்கிறது.

அங்குள்ள மிகப் பிரபலமான கல்லூரிகளானறோயல் கல்லூரிக்கும், சென்ட் தோமஸ் கல்லூரிக்குமிடையே நடக்கும் கிரிக்கட் பந்தாட்டம் பள்ளிக்கூட மாணவர்களை மட்டுமல்ல, இக்கல்லூரிகளுடன் தொடர்பு கொண்ட மந்திரிகள், எம். பீ. க்கள், வியாபாரப் பிரபுக்கள், இன்னும் இத்தியாதி படேபடே ஆசாமிகளையும் கவரும் தன்மை வாய்ந்தது.

1879-ம் ஆண்டில் தொடங்கிய இந்தப் 'பயங்கர மோதல்' இப்பொழுது 89 வது முறையாக நடைபெறுகிறது.

இதுவரைசென்ட்தோமஸ் கல்லூரிக்கு 30 வெற்றிகளும் றோயல் கல்லூரிக்கு 28 வெற்றிகளும் கிடைத்துள்ளன. 30 ஆட்டங்கள் வெற்றி தோல்வியின்றிமுடிவடைந்திருக்கின்றன.

அந்தக் காலம் தொடக்கமே றோயல்அல்லதுசென்ட் தோமஸுக்கு தங்கள் பிள்ளைகளை அனுப்புவது ஒரு பெரும் அந்தஸ்துக்குரிய விஷயம் என்று கொழும்பு நகர் வாழும் பெருமக்கள் கருதி வந்திருக்கிறார்கள். ஓரளவுக்கு அதுவும் உண்மையே. ஏனென்றால் அக்கல்லூரிகளில் மிகச் சிறந்த முறையில் கல்வி ஊட்டி வந்தார்கள்.

எனவே வசதி உள்ளவர்கள், அதாவது பணம் படைத்தவர்கள், தங்கள் பிள்ளைகளை (அவர்கள் சரிய முட்டாள்களாய் இருந்தாலும்) றோயலுக்கோசென்ட்தோமஸுக்கோ அனுப்பினார்கள். அக்கல்லூரிகளில் கல்வி பயின்றதே ஒரு திறமை என்று கருதப்பட்டது.

நமது பிரதமர் டட்லியும் அவரது தந்தை டி. எஸ். உம் சகோதரர் றுபேர்ட்டும் தோமியர்கள்.

சிறிமாவின் கணவர் பண்டாரநாயகவும் தோமியர் ஆனாலும் அவர் கிரிக்கட் ஆடவில்லை.

சரவணமுத்து, நாகலிங்கம், தியாகலிங்கம், செல்வரத்தினம் என்ற கொழும்பு வாழ் தமிழ் குடும்பங்களும் இந்தக் கிரிக்கெட் மோதலில் சம்பந்தப் பட்டிருக்கின்றன.

றோயல் - தோமியன் கிரிக்கட் என்றால் மாணவர்களுக்கு மட்டுமல்ல, வீட்டிலுள்ள எல்லோருக்குமே விடுமுறை தான்.

மாணவர்கள் நகரத்திலுள்ள மிகப் பழைய கார்களைத் தேடிப் பிடித்து வாடகைக்கு அமர்த்திக்கொண்டு முடியுமானால் கூடாரத்தை மடித்து விட்டுக் கொண்டு, கொடிகளை வீசிக் கும்மாளம் அடித்துக் கொண்டு வனாத்த முல்லையிலுள்ள தமிழ் யூனியன் ஓவல் மைதானத்துக்கு பவனி செய்து கொண்டிருக்க, அவர்களுடைய தாய் தந்தையர், மாமன் மாமியர், சகோதரர்கள் தங்கள் சொந்த டாம்பிக கார்களில் ஐஸ் கிறீம், சாண்ட் விச், முதலிய சிற்றுண்டிகளுடன் ஊர்வலம் போவார்கள்.

ஓவல் மைதானத்தில் கிரிக்கட் ஆட்டம் தன் பாட்டுக்கு நடந்து கொண்டிருக்கும். இங்கே பார்வையாளரி கூடாரங்களில் தகப்பன்மாரும், பாட்டன்மாரும், மாமன்மாரும் பியர் போத்தலைச் சுவைத்துக் கொண்டு சுங்கான் பிடித்துக்கொண்டு தங்கள் பழைய கால சம்பவங்களைப்பற்றி அரட்டை அடிப்பார்கள்.

[5ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் முன்னேற்றத்துக்கு சிரமதானத்தின் பங்கு

உடுப்பிட்டி, திங்கள்

''பண்டைய காலத்தில் வாழ்ந்த மக்கள் இன்று எம்மைப் போல் கஷ்டங்களை அனுபவிக்கவில்லை. தங்களுக்குத் தேவையான உணவு முதலியவற்றைப் பெருமளவில் உற்பத்தி செய்து அவற்றைப் பண்டமாற்றுச் செய்து தமக்குத் தேவையான பிற பொருட்களையும் வாங்கி வந்தார்கள். சிரமதான இயக்கங்கள் மக்களுக்கு ஐக்கிய மனப்பான்மையை ஏற்படுத்துவதோடு கிராமத்தை முன்னேற்றுகின்றது.''

இவ்வாறு கரணவாய் தெற்குக் கிராமசேவையாளர் திரு. கே. வேலாயுதபிள்ளை தென்கருணை வள்ளுவர் சனசமூக நிலைய இளைஞர்களின் சிரமதானப் பணியை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினார். சுமார் 75 வாலிபர்கள் இளகாமம் பகுதியிலுள்ள பாழடைந்த வீதியொன்றைச் சிரமதானம் மூலம் மூன்று தினங்களாகச் செப்பனிட்டனர். மேற்படி நிலையத் தலைவர் திரு. சி. வெள்ளைக்குட்டி தலைமையில் நடைபெற்ற இவ் இயக்கத்தை உடுப்பிட்டிக் கிராமசபைத் தலைவர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் நேரில் பார்வையிட்டுப் பாராட்டினார். சிரமதானத்தில் பங்கு பற்றியவர்களுக்குக் கிராமசேவையாளர் சிற்றுண்டி வழங்கினார்.

## தேற்றாத்தீவு யூதாததேயு திருநாள்

கல்முனை, திங்கள்

மட்டக்களப்பு - கல்முனை வீதியில் உள்ள தேற்றாத்தீவு அர்ச். யூதாததேயு திருநாள் இம்மாதம் 17-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து எட்டு நாட்கள் நடைபெறவுள்ளது.

25-ம் திகதி மாலை ஆராதனைகளும் அதையடுத்து, யூதாததேயுவின் திருச்சொரூப சுற்றுப்பிரகாரமும் நடைபெறவிருக்கிறது. மறுநாள் காலையில் மகாவந்தனைக்குரிய ஆண்டகை தியோகுப்பிள்ளையால் திவ்விய பாடற் பூசை நடைபெறும்.

யாத்திரிகர்களின் வசதியை முன்னிட்டு விசேஷ ஒழுங்குகள் செய்யப்படுமென அறியப்படுகிறது. கல்லாறு அருளானந்தர் தேவாலய பங்குக்குரு இத் திருநாட்களுக்குரிய ஒழுங்குகளை கவனித்து வருகிறார்.

## சாலை தீவு அந்தோனியார் திருநாள்

யாழ்ப்பாணம், செவ்.

சாவதீவு அர்ச். அந்தோனியார் திருநாள் நாளைய தினம் நடைபெறவிருக்கிறது. யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து துறைமுகம் வரை விசேட பஸ் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

## சூசையப்பர் திருநாள்

கல்முனை, செவ்

கல்முனை பாத்திமாக் கல்லூரியில் உள்ள பரிசுத்த பாத்திமா மாதா கோவிலில் புனித சூசையப்பர் திருநாள் இம்மாதம் 19ம் திகதி கொண்டாடப்படவிருக்கிறது.

புனித சூசையப்பர் மடத்தைச் சேர்ந்த துறவிகளின் பாதுகாவலரான சூசையப்பரின் திருநாளை முன்னிட்டு, இம் மாதம் முதல் நவநாள் நடைபெற்று வருகின்றது.

# யோகாசனத்தின்பயன்

## யோகி இராமையா கூறுகிறார்

மருதானை, செவ்.

மதத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் யோகத்திற்குமிடையில் அதிக முரண்பாடுகள் இல்லை. ஆகவே இம்மூன்றையும் உணர்ந்து யோகாசனம் செய்வோமேயானால் நிச்சயம் நல்ல பலன்கிடைக்கும்.

உலக யாத்திரையொன்றை மேற்கொண்டிருக்கும் யோகி இராமையா மேற்கண்டவாறு நமது நிருபரிடம் கூறினார். இவர் இம்மாதம் 15-ம் தேதிவரை இலங்கையில் தங்கியிருப்பார்.

பம்பலப்பிட்டி மாணிக்க விநாயகர் தேவாலயத்தில் தங்கியிருக்கும் இவர், தினமும் காலையில் யோகாப்பியாச வகுப்புகள் நடத்திவருகிறார். யோகத்தின் உன்னத தத்துவங்கள்பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்திவருகிறார்.

பர்மா, மலேஷியா, சிங்கப்பூர், ஜப்பான், இந்தோனேஷியா, வியட்னாம், நியூசிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு விஜயம்செய்து யோகத்தின் மகிமையை எடுத்துக்காட்டி வந்திருக்கும் இவர், ஆஸ்திரேலிய மக்கள் சித்த யோகத்தில் அதிக நாட்டம்கொண்டிருப்பதாக கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், மேற்கத்திய நாடுகளில் யோகத்தை தேகப்பயிற்சியாகமட்டுமே செய்கிறார்கள். அவர்கள் யோகத்தின் உண்மையான தத்துவத்தை உணர்ந்து அதனை செய்வார்களேயானால் கீழைத்தேய மக்களைவிட அவர்கள் அதிக பலனடைய முடியும் என்றார்.

1944-ம் ஆண்டில் யோகாசனத்தை ஆரம்பித்த இவர் இதுவரை 45 நூல்களை எழுதியிருக்கிறார்.

## புதிய நியமனங்கள்

கொழும்பு, செவ்.

பொதுசேவைகள் கமிஷனால் நியமிக்கப்பட்டுள்ள தமிழ் உத்தியோகத்தர்களின் விபரம் வருமாறு:—

நீர்ப்பாசன இன்ஜினியர்கள்: திரு வி பாலசுப்பிரமணியம், புகையிரத இலாகா: திரு எஸ் ஜி ஜெயரத்தினம், நீர்ப்பாசன இலாகா: திருவாளர்கள்: ரி சிவபாதம், ஜி திருச்சிற்றம்பலம், எம் ராசியஸ், எம் யோகானந்தன், எஸ் ராஜகுலசிங்கம், கே விக்கினேஸ்வரன், என் சின்னப்பு, வி இரகுநாதன், வி குலவரதராஜா, கே தியாகமூர்த்தி, கே சங்கரப்பிள்ளை, ரி கே ராமேசுவரா, எஸ் திருஞானசம்பந்தர், எஸ் செல்வராசா, எஸ் சின்னராசா, எம் என் அப்டீன், வி கங்காதரன்.

நீர்ப்பாசன அதிபர்: திரு வி என் ராஜரத்தினம், மின்சார இலாகா: திரு எம் லோகநாதன், திரு எஸ் விஜயதேவ, திரு என் எம் கிறிஸ்ரி, திரு ஏ தருணநிதி.

பயிற்சிக் கலாசாலை அதிபர்: திரு எஸ் கந்தசாமி, இலங்கை ஓவர்சிஸ் சேவைகள்: திரு ஏ எச் மீராஸ்டோ, தபாலதிபர்கள் சேவை: திரு கே பூரணாந்தா, திரு ஜே டி சேனாதிராசா. உபசட்ட வல்லுநர்: திரு வி ஏ எஸ் ஜோசப், மொழிபெயர்ப்பு சுப்பிறிண்டன்: திரு சி நடராசா, திரு எஸ் சரவணமுத்து. கல்வி அமைச்சு: திரு எஸ் மாணிக்கவாசகர்.

## பயிற்சி முடிந்து திரும்பினார்

புலோலி, திங்கள்

அரசாங்க மின்சாரதிணைக்களத்தைச்சேர்ந்த இரசாயன நிபுணர் திரு. எஸ். பேராசிரியன் தமது விசேஷ பயிற்சியை புதுடில்லியில் முடித்துக்கொண்டு இலங்கை திரும்பியுள்ளார்.

இலங்கைப் பல்கலைக்கழகப்பட்டதாரியான இவர் இலங்கை பல்கலைக்கழகம் அக்குவைனாஸ் ஆகியவற்றின் விரிவுரையாளராகப் பணிபுரிந்துள்ளார்.

பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தின் செயலாளராகவும் இவர் இருந்துள்ளார்.

இவர் புலோலி தெற்கைச் சேர்ந்த திரு. கே. சுப்பிரமணியம் தம்பதிகளின் மூத்த புதல்வராவர்.

## தமிழரசு வாலிப முன்னணி மகா நாடு

யாழ்ப்பாணம் செவ்

தமிழரசுக் கட்சி வாலிப முன்னணியினரின் வருடாந்த வாலிபர் மகாநாடு இம்முறை திருக்கோணமலையில் நடைபெறலாமெனத் தெரிகின்றது. இவைகள் பற்றி ஆராய வாலிப முன்னணியின் திருமலைக் கிளைக்கூட்டம் இம் மாதம் 20ம் திகதி நடைபெறவிருக்கின்றது.

திருமலை எம்.பி. திரு. என் மாணிக்கராசாவின் இல்லத்தில் இக்கூட்டம் நடைபெறவிருக்கின்றது. இக் கூட்டத்தில் வாலிபமுன்னணித் தலைமைப் பீடத்தின் உபதலைவர் திரு. க. திருநாவுக்கரசு, நிர்வாகச்செயலாளர் திரு. சி. பால சிங்கம் ஆகியோரும் கலந்து கொள்வார்கள்.

(கா, நி)

## கிருமிநாசினி தெளித்தவர் மரணம்

அனலைதீவு, திங்கள்

புகையிலைத் தோட்டத்தில் 'பம்' மூலம் கிருமிநாசினி மருந்து தெளித்துக்கொண்டிருந்த வாலிபர் ஒருவர் திடீர் மயக்கமுற்று மரணமான சம்பவம் அனலைதீவில் நடந்துள்ளது.

அனலைதீவைச் சேர்ந்த கனகசபை சண்முகராசா வயது [20] தமது புகையிலைத்தோட்டத்தில் தொடர்ந்து இருநாட்களாக நச்சு மருந்து தெளித்ததாகவும் இரண்டாவது நாள் மருந்து தெளிக்கும்போது மயக்கமடைந்ததாகவும், மயக்கமுற்ற நிலையில் ஊர்காவற்றுறை அரசினர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது அங்கு அவர் மரணமானதாகவும் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

தலையிலிருந்த பழையபுண் ஒன்றால் நச்சு உட்சென்றிருக்கலாமெனத் தெரிவிக்கப்பட்டது.

நயினாதீவு மரணவிசாரணை அதிகாரி மரணவிசாரணை நடத்தினார், தற்செயலாக ஏற்பட்ட திடீர் மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## விவசாயகுழுக்கள் வேலை ஆராய குழு

கொழும்பு, திங்கள்

பயிர்ச்செய்கைக்குழுக்களின் வேலை, உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்குரிய ஏதுக்கள் ஆகியன குறித்து ஆராய விவசாய உணவு அமைச்சர் திரு. எம். டி. பண்டாவினால் ஒரு விசேஷ குழு நியமிக்கப்பட்டுள்ளது.

திரு. எச்.எஸ். வனசிங்கா தலைமையில் இயங்கும் இக்குழுவில் திருவாளர்கள் எஸ். பி. சேனநாயக்கா, எம். எஸ். பெரேரா, டி. எம். பி. பி. தசநாயக்கா, எம். எல். ஜே. விக்கிரமரத்தின ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். இக்குழுவின் காரியதரிசியாக ஆர். அபயரத்தின தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

## "நாட்டிலும் நகரிலும்"

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

தாய்மார்களும் பாட்டிகளும் மாமிகளும் கிரிக்கட் உலகத்தை அறவே மறந்துவிட்டு காஞ்சிபுரம் எங்கே கிடைக்கும் என்பதைப் பற்றி மாநாடு கூட்டுவார்கள். யார் வெற்றி, யார் தோல்வி என்பது இவர்களுக்குத் தெரிய மாட்டாது. தெரிய வேண்டிய அவசியமல்ல.

இவர்களைப் பொறுத்தவரையில் ஒரு திருவிழா கடந்து முடிந்து விட்டது. இனிமேல் அடுத்த கிரிக்கட் 'மோதல்' எப்பொழுது வரும் என்று எதிர் பார்த்திருப்பார்கள்.

வழிப்போக்கன்

## நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகள்

### சைவ மறுமலர்ச்சி கூட்டம்

அகில இலங்கை சைவாலயதர்மகர்த்தாக்கள் சபை, அகில இலங்கை வேதாகம சைவசித்தாந்தசபை, அகில இலங்கை சைவானுட்டான பாதுகாப்புச் சபை ஆகியவை இன்று பிற்பகல் ஸ்ரீ மலைச் சிவன்கோவில் முன்றலில் சைவாலயங்களுக்கும், சைவசமய அனுட்டானங்களுக்கும், வேதசிவாகமங்களுக்கும் காலத்துக்குக்காலம் ஏற்படும் இன்னல்கள் பற்றியும், அதனால் சைவசமயத்துக்குள்ள ஆபத்தையும் ஆராய்ந்து நடவடிக்கைகளை எடுக்குமுகமாக ஒருகூட்டத்தை நடத்த ஏற்பாடுகள் செய்துள்ளன. பல சைவப்பெரியார்கள் விரிவுரையாற்றவிருக்கிறார்கள்.

### ஞாபகார்த்த கூட்டம்

மறைந்த பிரபல எழுத்தாளர் திரு. அ. ந. கந்தசாமியின் ஞாபகார்த்தத்தை ஒட்டி நாளை 5 மணிக்கு ஓர் இலக்கியக்கூட்டம் நல்லூர் வாசிகசாலையில் நடைபெறவிருக்கிறது. 'மகாகவி' தலைமைதாங்குவார் கலை இலக்கிய பெருமன்றம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

### கொழும்பிலும்

திரு. கந்தசாமியின் ஞாபகார்த்தத்தை யொட்டி இன்று மாலை 5 மணிக்கு கொழும்பு மேட்டுத்தெரு விவேகானந்தசபை மண்டபத்திலும் கூட்டம் நடைபெறவிருக்கிறது. அவரது நினைவாக ஆக்கபூர்வமான செயலாற்றுதல்பற்றி ஆராயப்படும்.

### சிவஞானபோத விரிவுரை

காரைநகர் சிவஆச்சிரமத்தில் வரும் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சிவஞானபோத தொடர்ச்சியான விரிவுரையை திரு. க. குமாரசுவாமி ஆரம்பித்து வைக்கவிருக்கிறார்.

### நாடகம்

உரும்பராய் தெற்கு சிங்ககண்டி சனசமூகநிலையத்தார் 'நம்பமுடியவில்லை' யெனும் சமூக நாடகத்தை அடுத்தமாதம் 9-ம் திகதி உரும்பராயில்மேடையேற்றவிருக்கின்றனர்.

## கார் உடைத்து திருட்டு

அளவெட்டி, திங்கள்

கராச்சில் நின்ற காரை இரவில் இனந்தெரியாதவர்கள் உடைத்து கார் உறுப்புகளையும், முக்கியமான தஸ்தாவேஜுகளையும் களவாடிய சம்பவம் ஒன்று அச்சுவேலியில் நடைபெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலியைச் சேர்ந்த செல்லையா கதிர்காமத்தம்பி என்பவர் தனதுகாரை வழமையாக இரவில் நிறுத்தும் கராச்சில் நிறுத்தி விட்டு வீடுசென்று பின்னர் வந்து பார்த்தபோது தமது காரை உடைத்தும் முக்கியகார்தஸ்தாவேஜுக்களை சேதமுறச் செய்ததாகவும், கார் உறுப்புகள் களவாடுச் செல்லப்பட்டுவிட்டதாகவும் காங்கேசன்துறைப் பொலிஸில் புகார் செய்துள்ளார்.

இது சம்பந்தமாகக் காங்கேசன்துறை குற்றத்தடுப்பு இன்ஸ்பெக்டர் வி. வி. செல்லையா புலன் விசாரணை செய்து வருகிறார்.

## ஐக்கியமுன்னணி கூட்டம்

யாழ்ப்பாணம், செவ்.

சமசமாஜ— கம்யூனிஸ்ட் ஐக்கிய முன்னணியின் சார்பில் உரும்பிராய் சந்தை மைதானத்தில் நாளைமாலை கூட்டமொன்று நடைபெறவிருக்கிறது.

திரு. எஸ். இராசதுரை தலைமையில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்தில், திருவாளர்கள் பி. நாகலிங்கம், ஐ ஆர் அரியரத்தினம், டொமினிக் ஜீவா, எம் கி. சுப்பிரமணியம் மற்றும் பலர் பேசுவார்கள்.

## பரதநாட்டியம்

யாழ்ப்பாணம், செவ்.

செல்வி துசிற்றாவின் பரதநாட்டிய நிகழ்ச்சி இன்று மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணநகரசபை மண்டபத்தில்நடைபெறவுள்ளது. திருக்கேதீசர இராசகோபுர நிதிக்காக இந்நடன நிகழ்ச்சி நடைபெறவிருக்கிறது.

## ஆலய உற்சவம்

யாழ்ப்பாணம், திங்.

தெல்லிப்பழை திருவீச்சரம் வரிமலைக் கந்தசுவாமி கோவில் திருவிழா உற்சவம் இம்மாதம் 15-ந் திகதி ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 15 நாட்கள் நடைபெறும் உற்சவத்தில் 28-ம் திகதி சப்பரத் திருவிழாவும்; 29-ந் திகதி தேர்த்திருவிழாவும், 30-ந் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவிருக்கிறது.

## லண்டன் சென்றுள்ளார்

திருக்கோணமலை, திங்கள்

திருகோணமலை சிவன் வீதியைச் சேர்ந்த ஆர். சிவசுப்பிரமணியம் தம்பதிகளின் மூத்த புதல்வரான திரு. எஸ். இரமசந்திரன் உயர்தரக் கல்வியும் பயிற்சியும் பெறுவதற்காக லண்டனுக்கு அண்மையில் சென்றுள்ளார். இவர் திருக்கோணமலை இராமகிருஷ்ண மிஷன் இந்துக்கல்லூரி பழைய மாணவர்.

## பயிற்சி வகுப்புகள்

யாழ்ப்பாணம், புருனி

புனிதவளன் விளையாட்டுக் கழகத்தின்சார்பில், உடற்கட்டமைப்பு பயிற்சி வகுப்புகளை வண பிதா பெனேற் கொன்ஸ்ரென்ரைன், ஆரம்பித்து வைத்தார்.

மனிதனின் மனோகட்டுப்பாட்டிற்கு உடற்கட்டமைப்புப் பயிற்சி உதவியளிக்குமென்றும் அவர் மேலும் பேசும்போது கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசன்துறை அந்தஸ்து உயர்வு ஆராய மகாநாடு

அளவெட்டி, திங்கள்

காங்கேசன்துறை பட்டின சபையை நகரசபை அந்தஸ்துக்கு உயர்த்துவது சம்பந்தமாக ஆராய்வதற்கு இம் மாதம் 16 ம் திகதி ஒருமகாநாடு உள்ளூர் ஆட்சி அமைச்சரால் கொழும்பில் கூட்டப்பட இருப்பதாகத் தெரியவருகிறது.

இம் மகா நாட்டில் தெல்லிப்பழை, மயிலிட்டி உள்ளூர் ஆட்சி மன்றத் தலைவர்களும் காங்கேசன்துறை பட்டின சபைத் தலைவரும், மற்றும் இது சம்பந்தமான பிரமுகர்களும் பாராளுமன்றப் பிரதிநிதிகளும் கலந்து கொள்வார்களென தெரிகின்றது.

பட்டினசபையை நகர சபையாக உயர்த்துவது சம்பந்தமாக, எழுந்துள்ள பிரச்சினைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி திரு. என். இராசதுரை தனி நபர் கமிஷனராக உள்ளூர் ஆட்சி அமைச்சரால் நியமிக்கப்பட்டிருந்தார். இத்தனி நபர் கமிஷனர் முன்னிலையில் இரண்டு உள்ளூர் ஆட்சி மன்றங்கள், உட்பட சுமார் 35 சமூக சேவா சங்கங்களும் பொது மக்களும் சாட்சியமளித்துள்ளதாக தெரிய வருகிறது. இவ் விசாரணையில் அடங்கிய அறிக்கையை இம் மகாநாட்டில் பரிசீலனை செய்து அதிவிரைவில் பட்டின சபை நகர சபையாக உயர்த்துவது பற்றித் தீர்மானிக்கப்படுமென நம்பப்படுகிறது.

# இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

## செவ்வாய் 12-3-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 இசைப்பாடல்கள், 7-25 நிகழ்ச்சிக்குறிப்பு, 7-30 குரல் வளை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 தொழிலாளர்வேளை, 1-00 மாதர் கேட்டவை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 ஓடிவிளையாடுபாப்பா,

இரவு 6-15 நாடோடிப் பாடல்கள், 6-45 பாவளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு— ஆர். ராஜரத்தினம், 9-45 சித்திரம், 10-00 தோத்திரம்.

# பொது அறிவும் உள்ளூர் அறிவும்

**வினாக்கள்**

1. நியூசிலந்தின் பிரதம மந்திரி யார்?
2. இலங்கையின் பொருளாதாரத்திட்ட அமைச்சின் பாராளுமன்றக் காரியதரிசி யார்?
3. செக்கோச்சுலோவேக்கிய நாட்டின் தூதுவராக இலங்கையில் கடமையாற்றுபவர் யார்?
4. ஐ. நா. வியாபாரத்திற்கும் அபிவிருத்திக்கும் அமைந்த மகாநாட்டின் [UNCTAD] தலைமைக்காரியதரிசி [Secretary General] யார்?
5. இலங்கையின் புதிய வர்த்தக, வியாபார அமைச்சர் யார்?
6. இலங்கை உதைபந்தாட்டக்கோஷ்டியை தலைமை தாங்கி [Captain] விளையாடுபவர் யார்?
7. உலகில் முதல் விண்வெளி வீராங்கனையை அனுப்பி வெற்றிகண்ட நாடு எது?
8. இலங்கை விஞ்ஞான, கைத்தொழில் ஆய்வு நிலைய அதிபர் [Director of C I S I R] யார்?
9. ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபைத்தலைவர் [Chairman of R V D B] யார்?
10. சோவியத் ரஷ்யாவில் நம் நாட்டுத் தூதுவராக கடமையாற்றுபவர் யார்?
11. உலகில் கோதுமையை அதிகமாக இறக்குமதி [Largest Importer] செய்யும் நாடு எது?
12. ''கிளியோப்பெற்றிரு'' (Cleopatra) என்ற ஆங்கிலத் திரைப்படத்தில் அப் பாத்திரத்தை ஏற்று திறம்பட நடித்தவர் யார்?
13. ''எக்ஸ் கதிர்களை''(X Rays) ஐக் கண்டுபிடித்தவர் யார்?
14. உலக கிரிக்கெட் விளையாட்டில், அவ்விளையாட்டின் முழுப்பகுதியிலும் தலை சிறந்தவர் [Best Allrounder] எனக் கருதப்படுபவர் யார்?
15. மனித உரிமைகள் தினம் எந்நாளில் கொண்டாடப்படுகிறது?

[விடைகள் 7ம் பக்கம்]

# உபதபாற்கந்தோர் உத்தியோகஸ்தர்களுக்கு

## சலுகை கிடைக்கும்

யாழ்ப்பாணம், செவ்வாய்

உபதபாற்கந்தோர் உத்தியோகஸ்தர்களுக்கும் வீட்டு வாடகை, விடுமுறைப்படி உட்பட பல சலுகைகளை அரசாங்கம் அளிக்க முன் வந்துள்ளது.

உபதபால் கந்தோர்களை தபாற் கந்தோர் அந்தஸ்துக்கு உயர்த்துகையில் சேவையிலிருந்து நீக்கப்படுதல், வைத்திய அடிப்படையில் ஓய்வு பெறுதல் ஆகிய சந்தர்ப்பங்களிலும் அவர்களுக்கு சேவைக்கான சம்பளம் வழங்குவதற்கான அனுமதியை தபால் தந்திப் பகுதி அமைச்சர் மந்திரி சபையிடம் கோரியுள்ளார்.

இது சம்பந்தமாக அண்மையில் உபதபாற் கந்தோர் ஊழியர்களைக் கொண்ட தூது கோஷ்டியொன்று அமைச்சர் மொண்டேகு ஜயவிக்கிரமவைப் பேட்டிகண்டு தமது கோரிக்கைகள் பற்றி விளக்கிக் கூறியது. உபதபாற் கந்தோர் ஊழியர்களை நிரந்தர ஊழியர்களாக்குமாறு இத் தூதுக்குழு அமைச்சரிடம் கேட்டபோது, இதனால் சுமார் 70,00,000 ரூபா செலவாகுமென தெரிவித்த அமைச்சர் நாட்டின் பொருளாதார நிலைமையை உத்தேசித்து இதனை இப்போது செய்வது அசாத்தியமென்றும் தெரிவித்தார்.

எனினும் உபதபாற் கந்தோர் உத்தியோகஸ்தர்களுக்கு அரசாங்க சேவைக்காரர் நிதித் திட்டமொன்றை ஏற்படுத்த அரசாங்கம் ஆலோசனை செய்து வருவதாகத் தெரிகிறது இந்த ஆலோசனையை அரசாங்கப் பாராளுமன்றக்குழு அங்கீகரித்துள்ளதாகவும் தெரிகின்றது.

[கா. நி]

# காணாமற் போன கார் கைப்பற்றப்பட்டது

அளவெட்டி, திங்கள்

கீரிமலையில் காரை நிறுத்தி விட்டு குளிக்கச் சென்றபோது காணாமற் போனதாகத் தேடப்பட்ட காரையண்டத்தரிப்பில் வைத்து காங்கேசன் துறை பொலிசார் கைப்பற்றியுள்ளனர்ராம்.

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த மாதர் கதிரவேலு என்பவர் தமது காரை கீரிமலையில் நிறுத்திவிட்டு கேணியில் குளித்துவிட்டு வந்து பார்த்தபோது காரைக் காணவில்லையென காங்கேசன் துறைப் பொலிசில் புகார் செய்ததைத் தொடர்ந்து உடன் விசாரணையில் ஈடுபட்ட பொலிசார் பண்டத்தரிப்பில் வைத்து காரை கைப்பற்றியுள்ளதாகக் கூறப்படுகிறது. இதுசம்பந்தமாக விசாரணை தொடர்கிறது.





நீங்கள் லக்கி செவன் புகைப்பவராய் இருந்தால், சிகறெற் கலைப் பண்பாளர் குழலில் இருக்கின்றீர்கள் என்பதுதான் கருத்து. சுவை நலம் போதாது என்பவரையெல்லாம், போதும் என்று மனநிறைவு கொள்ள வைக்கும் சிகறெற் லக்கி செவன்.

நன்கு விளைந்த திறமான வேஜினியாப் புகையிலை கொண்டு மிகச் சிறந்த சுவை நலம் தரும் வகையில் உருவாக்கப்பட்டிருக்கும் லக்கி செவன்—பில்டர் முனையுடனும்—பில்டர் முனை இன்றியும் —புகைப்பதுதான் இன்றைய நாகரிகம் ஆகிவிட்டது.

உயர்ந்தோர் வரிசையில் சேருங்கள்.

லக்கி செவன் புகையுங்கள்.

AJNS L.T. 21-67.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவும், உள்ளூர் அறிவும்

**விடைகள்**

1. திரு. கீத் ஹொலியாக் (Mr. Keith Holyake).
2. திரு. ஆதர் அமரதுங்க (Mr. Arthur Amaratunga)
3. திரு. யேரோமிர் ஸ்ரெற்றின (Mr. Jaromir Stetina.)
4. டாக்டர் ரோல் பிரெபிஸ் (Dr. Raul Prebisch).
5. திரு. ஹியூ பர்னாந்து (Mr. Hugh Fernando).
6. திரு. மஹிந்த அலுவிகார (Mr. Mahinda Aluvihara).
7. சோவியத் ரஷ்யா (Soviet Russia).
8. டாக்டர் ஜோர்ஜ் பொன்னம்பெருமா (Dr. George Ponnemperuma).
9. திரு. டி. டபிள்யு. ஆர். கஹவித்த (Mr. D. W. R. Kahawita).
10. திரு. பி. எவ். பெரேரா (Mr. B. F. Perera).
11. பிரித்தானியா (Britain).
12. எலிசெபெத் டெய்லர் (Elizabeth Taylor).
13. டாக்டர் வில்ஹெம் ரொன்ற்கன் (Dr. Wilhelm Rontgon).
14. காவீல்ட் சோபஸ் (Garfield Sobers).
15. டிசம்பர் மாதம் 10-ம் நாள்.

[அடுத்த மாதிரி வினாவிடைகள் 19-3-68-ல் வெளிவரும்]

# வலிகாமம் வடக்கு பாடசாலைகளின் சங்கீத பேச்சு போட்டி முடிவுகள்

அளவெட்டி, திங்கள் வலிகாமம் வடக்கு ஆசிரியர் சங்கத்தின் ஆதரவில் வலி— வடக்கிலுள்ள பாடசாலைகளுக்கிடையேயான பேச்சு, சங்கீதப் போட்டிகள் நேற்று யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றன.

ஆங்கிலப் பேச்சுப்போட்டியில் வெற்றிபெற்றோர் விபரம் வருமாறு:- கீழ்ப்பிரிவு— ஆண்கள்— எஸ். செந்தில்மோகன் (தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி) எஸ். கமலராசா [மல்லாகம் இந்துக்கல்லூரி] எஸ். சுரேஸ்குமார் [தெல்லிப்பளை யூனியன் கல்லூரி] — பெண்கள்— ஆர் தயாளினி [தெல்லிப்பளை யூனியன் கல்லூரி[ எஸ். கிறிலதில்லா (யூனியன் கல்லூரி) எஸ். சுந்தரவல்லி (மல்லாகம் இந்துக்கல்லூரி(

மத்தியபிரிவு— ஆண்கள்- எஸ் யேசுராசா சுன்னாகம் [ஸ்கந்தாக்[ கல்லூரி) எ. யோகநாயகம் (சென் அந்தனீஸ்) என். அரியநாயகம் [சென் அந்தனீஸ்] பெண்கள்— இ. ஞானவதி (சுன்னாகம் ஸ்கந்தவரோதயா) எ. இந்திரமதி (தெல்லிப்பளை மகாஜனு) எஸ். நளாயினி [யூனியன் கல்லூரி]

மேற்பிரிவு— ஆண்கள்— என். குமார் [மகாஜனக்கல்லூரி] ஏ அருள்ராசா (மகாஜனக்கல்லூரி) ஆர். சுகுணசபேசன் [மகாஜனக்கல்லூரி] பெண்கள்— எஸ். சுகுணராணி (யூனியன் கல்லூரி) பிரேமளா மகாஜனக்கல்லூரி] சரஜாதேவி (மகாஜனக்கல்லூரி)

அதிமேற்பிரிவு— எஸ் சுகுமார் [மகாஜனக் கல்லூரி] கே. அரசரத்தினம் (சுன்னாகம் ஸ்கந்தா) எஸ். ரவீந்திரன் [தெல்லிப்பளை மகாஜன] பெண்கள்— புஸ்பதிலகா [தெல்லிப்பளை மகாஜனு] தமிழ்ப் பேச்சுப்போட்டி முடிவுகள்— கீழ்ப்பிரிவு ஆண்கள்— புராந்தகன் [மகாஜனு] எ. சுரேஸ்குமார் [யூனியன்] என். பரமநாயகம் (மல்லாகம் இந்து) பெண்கள்—வி. மாலினி சுன்னாகம் ஸ்கந்தா) எ. ஆர். போகநாதன் [சென் அன்ரனீஸ்] உமகாந்தன் வியாவிளான் மத்தியமகா வித்தியாலயம்) பெண்கள் - எஸ். லோகசுந்தரி (சுன்னாகம் ஸ்கந்தா] ஆர் ரஜனி [மகாஜனு] எஸ். சிவனேஸ்வரி ]ஸ்கந்தா] மேற்பிரிவு— ஆண்கள் — என். சண்முகலிங்கம் (மகாஜனு) கே. ஸ்ரீ சிவகுமார் லிங்கவேலாயுதன் [காங்கேசன்துறை [நடேஸ்வரா] பெண்கள்— வி சாரதாதேவி [மகாஜனு] எஸ். கமலாதேவி [நடேஸ்வரா] எஸ்கமலாதேவி (யூனியன்)

அதிமேற்பிரிவு— ஆண்கள் எஸ். சுந்தராசா [மகாஜனு] எஸ். கோபாலசிங்கி (யூனியன்) பொன்னுத்துரை [யூனியன்] பெண்கள்— சிவிக்கினேஸ்வரி [(யூனியன்] பி. நவநீதி [ஸ்கந்த ]எஸ். நாகேந்திரராணி (யூனியன்)

பாட்டுப்போட்டியில் தனித்துப்பாடி வெற்றியீட்டியவர்கள்—கீழ்ப்பிரிவு—ஆண்கள்—லட்சுமணகுமார் [அளவெட்டி [அருணோதயாக் கல்லூரி] எஸ். பாலச்சந்திரன் (அருணோதயா கே. அருட்சோதி [ஸ்கந்தா] பெண்கள்—எ. சிவரஞ்சனி (மகாஜனு) கே. தியாகேஸ்வரி [ஸ்கந்தா] கே. கலைமங்கரி [மகாஜனு]

மேற்பிரிவு— ஆண்கள் — எஸ். சண்முகராசலன் [ஸ்கந்தா] எஸ். சிவநடராசா [அருணோதயா] எஸ். சிவஞானராசா [அருணோதயா] அளவெட்டி [அருணோதயாக் பெண்கள்— எஸ். கலாநிதி [அருணோதயா] பானுமதி [மகாஜனு] ஜே. வீராந்தன் (மகாஜனு)

கூட்டுபாடல்களில் வெற்றியீட்டிய பாடசாலைகள் :- ஆண்கள்: கீழ்ப்பிரிவு அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, ஸ்கந்தவரோதயாக் கல்லூரி பெண்கள்- மகாஜனக் கல்லூரி, ஸ்கந்தாக் கல்லூரி, மகாஜனக் கல்லூரி.


மேற்பிரிவு: ஆண்கள்— ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அருணோதயாக் கல்லூரி, மகாஜனக்கல்லூரி, ஸ்கந்தவரோதயா



## 50 சதத்துடன் விரைவில் செல்வந்தராகுங்கள்

ஒவ்வொரு வாரமும், நூற்றுக்கு மேற்பட்டவர்கள் விரைவில் செல்வந்தராகி விடுகின்றனர்.

அடுத்து உங்கள் முறை ஆகலாம்

50 சதத்திற்கு நீங்கள் புத்தம் புதிய கார் ஒன்றையும் பெருந் தொகைக்கான காசோலையையும் பெறலாம்.








அதிர்ஷ்டத்தை எதிர்பார்த்து இராதீர் உங்கள் தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டுகளை இன்றே வாங்குங்கள்.

உங்களுடைய அடுத்த பெரிய சுவீப்புகளில்

முதல் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளுக்கு அவர்களின் பரிசுத் தொகையிலிருந்து கீழ்க்காணும் கார்களை வாங்கச் சந்தர்ப்பம் அளிக்கப்படும்.



சீட்டிழுப்பு இல. 185

சீட்டிழுப்பு இல. 185 தேதி 14-3-68 புத்தம் புதிய போர்ட் கோர்டினு கார் ரூ. 16,250/-*



சீட்டிழுப்பு இல. 186

சீட்டிழுப்பு இல. 186 தேதி 22-3-68 புத்தம் புதிய போர்ஜோ 404 கார் ரூ. 19,500/-*

இவையாவும், ரூபா மதிப்புக்குறைக்கப்படுவதற்கு முன்னிருந்த சாதாரண கொம்பனி அட்டவணை விலைகள்; வரிகளும் சேர்க்கப்பட்டவை.

இந்தக்கார்களை வாங்குவதற்கான சந்தர்ப்பம் சீட்டிழுப்புக்குப் பின் 14 நாட்களுக்கு மட்டும் வழங்கப்படும்.

ஞாபகத்திலிருக்கட்டும்:-

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டும், அதிர்ஷ்டத்தின் வாயிலுக்கு உங்களை அழைத்துச் செல்கிறது.

50 சதம் முதலீடு செய்து பெரும் செல்வம் தேடுங்கள்.


வட்டு

## திருநாவுக்கரசு வித்தியாசாலை

யாழ்ப்பாணம், செவ்வாய் ஆங்கில ஆசிரிய சங்கத்தினரின் சார்பில் நடைபெற்ற பேச்சுப்போட்டியில் வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாசாலை மாணவர்கள் வெற்றிபெற்ற விபரம்.

மத்தியபிரிவு: ஆண்கள்- க. பாலகுமார். ஆரம்பபிரிவு: பெண்கள்: சி. தங்கரத்தினம். ஆரம்பபிரிவு: ஆண்கள்- ஐ. தேவானந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அரசாங்க உத்தியோகத்தை நம்பி ஏமாருதீர்கள்'

## படித்த வாலிபர்களுக்கு உடுவில் எம். பி. புத்திமதி

குரும்பசிட்டி, திங்கள்

''படித்த வாலிபர்கள் அரசாங்க உத்தியோக வேலை வாய்ப்புகளை நம்பி காலத்தை வீண் விரயம் செய்யாது இளைஞர் குடியேற்றத் திட்டங்களில் சேர்ந்து தமக்கும் நாட்டு முன்னேற்றத்திற்கும் உழைக்க முன்வரவேண்டும்''

ஏழாலை தெற்கு-மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் புதிய கட்டிடத் திறப்புவிழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். திரு. சு. அம்பலவாணர் இவ்விழாவிற்கு தலைமைவகித்தார்.

சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. க. சி. பொன்னுத்துரை புதிய கட்டிடத்தைத் திறந்துவைத்தார்.

திரு. தர்மலிங்கம் மேலும் கூறியதாவது: நமது பொருளாதார வளர்ச்சி தற்போது விவசாயத்திலும் குடிசைக் கைத்தொழில்களிலும் தான் தங்கியுள்ளது. இவற்றின் மூலம் உற்பத்தியாகும் பொருட்களை தகுந்தவிலைக்கு விற்பனவு செய்ய கூட்டுறவு ஸ்தாபனங்கள் உதவிசெய்ய வேண்டும்,

உள்நாட்டு அமைச்சினால் நிறுவப்பட்டுள்ள கைத்தறி நெசவு நிலையங்களில் உருவாக்கப்படும் உடு துணிகளை சிறந்த மாதிரி மக்கள் மத்தியில் விற்பனவு செய்ய கூட்டுறவு ஸ்தாபனங்கள் இணைந்து செயலாற்றவேண்டும். இலங்கையில் 1949-ம் ஆண்டில் உணவு தட்டுப்பாடு நிலவியபோது கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலம் மக்களுக்கு உணவுப் பொருட்கள் பங்கிடு செய்யப்பட்டு பசி, பட்டினியிலிருந்து மக்கள் காப்பாற்றப்பட்டனர். இதிலிருந்து நமது நாட்டில் கூட்டுறவு இயக்கம் முன்னேறி வருகின்றது.

யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளை, பண்டிதர் க. நாகலிங்கம், க. சிவகுரு ஆகியோர் உட்பட வேறு பலரும் இவ்விழாவில் உரையாற்றினர்.

## புதியகாரியாலயம்

வவனியா, திங்கள்

வவனியாவில் 16 ஆயிரம் ஏக்கர் நில உப உணவு உற்பத்தித்திட்டமாகிய முத்தையன் கட்டுத்திட்டத்தில் உள்ள வேலைகளைக் கவனிப்பதற்கு ஒரு காரியாலயம் திறந்துவைக்கப்பட்டுள்ளது

## சந்தேக நபர்கள் சரணடைந்தனர்

யாழ்ப்பாணம், புதன்

கொழும்புத்துறையைச் சேர்ந்த மயில்வாகனம் என்பவர் மண்டாவினால் தாக்கப்பட்டது சம்பந்தமாக பொலிசாரினால் தேடப்பட்டுவந்த சந்தேக நபர்களான விஸ்வலிங்கம், திருநாவுக்கரசு மற்றும் இரு சகோதரர்களாகிய நால்வரும் நேற்றுக்காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு அகஸ்டீன் சில்வா முன்னிலையில் சரணடைந்தனர்.

சந்தேகநபர்கள் சார்பில் புறக்டர் ஏ. அன்ரனி ஆஜரானார் மாஜிஸ்திரேட் சந்தேக நபர்களை பிணையில் செல்ல அனுமதித்து இம்மாதம் 23-ம தேதி கோர்ட்டில் ஆஜராகும்படி உத்தரவிட்டார்.

## கூடிய ரப்பர் வரி சீனு அளிக்கும்

கொழும்பு, புதன்

இலங்கையின் ரூபாய் நாணய மதிப்பைத் தொடர்ந்து இலங்கை—சீன ரப்பர் ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையிடமிருந்து சீனு வாங்கும் ரப்பின் கப்பல் ஏற்றுமதி வரிக்கு ரூத்தலுக்கு ஒன்றரை சதம் அதிகமாக அளிக்கச் சீனு ஒப்புக்கொண்டுள்ளது. தற்போதைய வரி 5 சதமாகும் சீனு இவ்விதம் அதிக வரிப்பணம்செலுத்துவதன் மூலம் இலங்கைக்கு ரூ. 30 லட்சம் அந்நிய செலாவணி கிடைக்குமெனத் தெரிகிறது.

## பாடசாலையில் எல்லாமிருக்கிறது ஆசிரியர் இல்லை

அனலைதீவு, திங்கள்

அனலைதீவு அரசினர் சதாசிவ மகாவித்தியாலயத்தில் கடமையாற்றிய அதிபர் இளைப்பாறி ஒரு வருடமாகியும் இவரது இடத்துக்கு இதுவரை அதிபர் எவரும் நியமிக்கப்படவில்லை. கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர வகுப்பு வரையும் உள்ள இப் பாடசாலையில் விஞ்ஞான பட்டதாரிகளோ கணித ஆசிரியர்களோ இல்லையாம். தரமான ஆய்வுகூட மிருந்த போதிலும், இம் மகா வித்தியாலயத்திற்கு சமீபத்தில் கல்வி இலாகாவால் செய்யப்பட்ட ஆசிரியர்கள் மாற்றத்தின் போதாவது விஞ்ஞான கணித பட்டதாரிகளை அனுப்பாதது குறித்து இப்பகுதிப் பெற்றோர் மிகவும் அதிருப்தி அடைந்துள்ளனர்.

இப்பாடசாலை அரசினரால் பொறுப்பேற்க முன்னர் 6 பட்டதாரிகளுடனும் 17 பயிற்றப்பட்ட ஆசிரியர்களுடனும் இயங்கியதாகவும் தற்பொது 15 பயிற்றப்பட்ட ஆசிரியர்களுடனும் ஒரேஒரு கலைப்பட்டதாரிகளுடனும் இயங்கி வருகின்றதாம்.

ஏற்கனவே கல்விப் பொதுத் தராதர சாதாரண பகிரங்க பரீட்சைக்கு ஒருமுறை தோன்றிய மாணவர்களுக்கு தூயகணிதம்பௌதிகம் போன்ற பாடங்கள் கற்பிக்க ஆசிரியர்கள் இல்லையாம். தற்சமயம் பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியர் ஒருவரே தூயகணிதம்கற்பித்து வருகிறாராம். இந் நிலைமை நீடித்தால் அனலைதீவு மாணவர்களின் எதிர்காலநிலைஎன்னவாகும் எனப் பெற்றோரும் அஞ்சுகின்றனர்.

இவை பற்றி தீவுப்பகுதி வட்டார வித்தியாதரிசி திரு தல்லையாவையும், வடமாநிலக் கல்வி அதிபதியையும் அனலைதீவு பொதுமக்களின் பிரதிநிதிகள் பேட்டிகாண விருப்பதாக தெரிய வருகிறது.

## விவசாயிகளுக்கு ஆறுதல்

வவனியா திங்கள்

செய்கைபண்ணப்பட்ட நெல் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு விவசாயிகளுக்கு கடன் பணம் கொடுக்குமாறு வவனியா அரசாங்க அதிபர் திரு. வி. சி. பெரேரா சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையும் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

# செய்தி சுருக்கம்

### பாடசாலை பஸ் சேவை

திருப்திகரமான பஸ் சேவை இல்லாத காரணத்தால் பாடசாலைகளுக்குப் பிந்திச் செல்லும், மாணவ மாணவிகளை பாடசாலைத் தலைவர்கள் அநுவசியமாகத் தண்டிக்கிறார்களாம். திருக்கோணமலைப் பட்டினப்பாடசாலைகளில் கல்வி பயிலும் கிராமப்புற மாணவ மாணவிகள் மத்தியில் இருந்து இப் புகார்கள் வெளிவந்துள்ளன.

### மாணவ ஆசிரியர்

நாலு வருடகால சேவை ஒப்பந்தத்தின்கீழ் நியமனம் செய்யப்பட்ட மாணவ ஆசிரியர்கள் கல்வி அமைச்சு ஒரு முடிவு எடுக்கும்வரை தொடர்ந்து பணியாற்றுவர். இது பற்றி கோலை மாவட்டப் பாடசாலைகளிலுள்ள சகல வித்தியாலயத் தலைவர்களுக்கும் கிழக்கு வித்தியாதிபதி சுற்றுநிருபமொன்று அனுப்பியுள்ளார்.

### கல்வி அதிகாரி முயற்சி

தலவாக்கொல்லையிலும், லிண்டுலையிலும் ஒரு தமிழ்ப் பாடசாலை இல்லாத குறையைத் தீர்ப்பதற்கு நுவரேலியா கல்வி அதிகாரி முயற்சி எடுத்துவருகிறார். மலையக செனேட்டர் திரு. ஆர். யேசுதாசனுக்கு அவர் கடிதம் மூலம் இதை அறிவித்துள்ளார். அக்கடிதத்தில் பாடசாலை கட்டுவதற்கு ஏற்ற இடம் தலவாக்கொல்லைக்கும், லிண்டுலைக்கும் இடையில் இருப்பதாக கூறப்பட்டுள்ளது.

## 49பேர் கைது

புதுடில்லி, மார்ச்.11

புதுடில்லியில் இன்று கட்டுப்பாட்டைமீறி ஆர்ப்பாட்டம் செய்த சம்யுக்த சோஷலிஷக் கட்சியைச் சேர்ந்த 49 பேர் கைதுசெய்யப்பட்டனர். இவர்களில் எம் பிக்கள் 'கட்ச் தீர்ப்பு சம்பந்தமாக ஜனாதிபதியிடம் ஆட்சேபம் ஒன்றை சமர்ப்பிப்பதற்காக அவர்கள் ஊர்வலமாகப் போனார்கள்.

## விவ்சாய வகுப்பு

வவனியா, திங்கள்

வவனியாவிவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பு முறை பற்றியும், செய்கை முறை பற்றியும் அறிவுரை வழங்குவதற்காக இம்மாதம் தொடக்கம் விவசாயப் போதனாசிரியர் ஒருவர் இங்கு வரவிருப்பதாக அறியப்படுகிறது.

## முஸ்லிம்பெண்கள் குறைபாடு

வவனியா, திங்கள்

வவனியாவிலுள்ள முஸ்லீம் பெண்கள் இங்குள்ள ஆஸ்பத்திரியில் பெண் அப்போதிக்கரி இல்லாதிருப்பதால் பெரும் கஷ்டமடைய வேண்டியிருப்பதாகத் தெரிகிறது.

இங்கிருந்த பெண் அப்போதிக்கரி இடமாற்றலாகிப் போய் விட்டதால் அந்த இடத்துக்கு இதுவரை எவரும் நியமிக்கப் படாததாலேயே இவ்விதம் இவர்கள் கஷ்டமடைய வேண்டியிருக்கிறது,

இது சம்பந்தமாக வவனியா எம்.பி. திரு. தா, சிவசிதம்பரம் சுகாதார அமைச்சருடன் தொடர்பு கொண்டுள்ளார்.

## மேலும்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஆண்டுகளாக சிறையில் இருந்துவந்தனர். மேலும் நூற்றுக்கணக்கான ஆபிரிக்[illegible] [illegible] சிறையில் இருந்துவருகின்றனர்.

ஆலயப் பிரவேசம்:

# பாடசாலைகளில் பிரசார கூட்டங்கள் நடதத முடிவு

யாழ்ப்பாணம், செவ்.

வடபகுதியிலுள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் பிரசாரக்கூட்டங்கள் நடாத்துவதற்கு ஒழுங்குகள் செய்வதென நேற்று மாலை வண்ணை வைத்தீஸ்வர வித்யாலய மண்டபத்தில் ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக அகில இலங்கை இந்துமாமன்றம் ஏற்பாடு செய்திருந்த ஆலோசனைக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அகில இலங்கை இந்துமாமன்ற யாழ்ப்பாணக் கிளைத் தலைவர் திரு. த. முத்துசாமிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் காரியாதிகாரிகள் முதலியார் சின்னத்தம்பி, திரு. சி. அம்பிகைபாகன் ஆகியோர் உட்பட மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மற்றும் சில தீர்மானங்கள் வருமாறு:-

யாழ்ப்பாணத்திலுள்ள சைவப்பிராமண சங்கம், தர்மகர்த்தாசபை, சைவ அனுட்டானசபை ஆகியவற்றுடன் சேர்ந்து ஆலோசித்து சுமுகமான முறைகளைத் தேர்ந்தெடுத்தல்.

5 000 துண்டுப்பிரசுரங்களில் ஆலயப் பிரவேசம் பற்றிய போசனைகளை வெளியிடுதல்.

சங்கானையில் அண்மையில் நடந்த கலவரங்களால் நடந்த பிணக்குகளை ஆராய்ந்து சமாதானம் ஏற்படுத்த திரு. த. முத்துசாமிப்பிள்ளையின் தலைமையில் ஒரு உபகுழு நியமிக்கப்பட்டது.

# வதிரி டையமண்ட்ஸ் பொமேர்ஸ் வென்றன

உடுப்பிட்டி, திங்கள்

வடமராட்சிக் காரியாதிகாரி பகுதி உதை பந்தாட்டச் சங்கத்தின் உடுப்பிட்டிப் பிரிவிற்குரிய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி சென்ற வெள்ளிக்கிழமை வதிரி பொமேர்ஸ்விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகியது.

வதிரி டயமண்ட்ஸ் கோஷ்டிக்கும், கொற்றுவத்தை சிவானந்தா கோஷ்டிக்குமிடையே ஏற்பட்ட உதைபந்தாட்ட மோதலில் வதிரி டயமண்ட்ஸ் கோஷ்டியினர் 4--1 கோல்களால் வெற்றியீட்டினர்.

இரு கோஷ்டியினருக்குமிடையே பலத்த போட்டி ஏற்பட்டதால் விளையாட்டு ஆரம்பம் முதல் விறுவிறுப்பாக இருந்தது, இடைவேளைக்கு முன்னர் வதிரி டயமண்ட்ஸ் கோஷ்டியினர் 2 கோல்களைப் போட்டனர். சிவானந்தா கோஷ்டியைச் சேர்ந்த வீரரான வ. சிவராசா பலமுறை முயன்றும் டயமண்ட் பின்னணி வீரர்களை மீறி ஒரு கோலேனும் போடமுடியவில்லை. போட்டி முடியும் தருணத்தில் சிவானந்தா கோஷ்டி ஒரு கோலை மட்டுமே போட முடிந்தது.

திரு. எஸ். கதிர்காமத்தம்பி இப்போட்டிக்கு மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக் கழகத்தினருக்கும் றேஞ்சர்ஸ் கோஷ்டியினருக்குமிடையே நடந்த உதைபந்தாட்டப் போட்டியில் வதிரி பொமேர்ஸ் கோஷ்டி 5--1 கோல்களால் றேஞ்சேர்ஸ் கோஷ்டியை வெற்றியீட்டியது. றேஞ்சேர்ஸ் கோஷ்டியினரின் விளையாட்டுச் சோபிக்காத காரணத்தினால் ரசிகர்கள் எதிர் பார்த்த அளவுக்குப் போட்டி அமையவில்லை.

இப்போட்டிக்குத் திரு. கே. சிவானந்தன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## புவியியல் மன்ற உறுப்பினர்கள்

உடுப்பிட்டி, திங்கள்

நெல்லியடி அரசினர் மத்திய மகாவித்தியாலயப் புவியியல்மன்ற நிர்வாகசபைக் கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்- செல்வன் வே. சுப்பிரமணியம், உபதலைவர்- செல்வி சு. நாகேஸ்வரி, செயலாளர்- சைவப்புலவர் செல்வன் செ. யோகராசா [கருணையூர் யோகன்] துணைச்செயலாளர்- செல்வி- க. பொன்ருஜினி, தனாதிகாரி- செல்வன் மு. கருணாநிதி, பத்திராதிபர்- செல்வன் மு. கவிதாதரன்.

வகுப்புப் பிரதிநிதிகளாகச் செல்வன்கள்- க. சிவபாலதாஸ், ஸ்ரீஸ்கந்தராசா, சாந்தலிங்கம், திருநாமம், செல்விகள்- மு. ஜெயந்தி ரதிநாயகி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# திருமலைச் செய்திகள்

### அஞ்சலி

முன்னர் திருக்கோணமலை மாவட்டத்தில் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளராக கடமையாற்றிய திரு. எம். மதியாலசிங்கத்தின் மறைவுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக கோணேஸ்வரர் ஆலயத்தின் அருகாமையிலுள்ள கடலில் அன்னாரின் அஸ்தி கரைப்பும், மாலை உள் துறைமுக வீதியிலுள்ள திருக்கோணமலை பல நோக்குக் கூட்டுறவு சங்கங்களின் சமாசக் கட்டிடத்தில் நினைவுக்கூட்டமும் நடைபெற்றன.

### வேலைநிறுத்தம்

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் 32,000 அங்கத்தவர்களும் இம்மாதம் 16 ந் திகதி அன்று அடையாள வேலைநிறுத்தத்தில் இறங்கவிருக்கின்றனர்.

திருக்கோணமலை துறைமுக [சரக்கு] கூட்டுத்தாபனத்துக்கும், இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்துக்குமிடையே ஏற்பட்ட ஒற்றுமை முறிவு காரணமாகத் திருமலைத் துறைமுகத்தில் தேயிலை ஏற்றுமதி ஸ்தம்பித்தது. இன்றுவரை நிலைமையில் எதுவித மாற்றமும் இல்லாததினால் ஒரு மாபெரும் வேலைநிறுத்தத் திட்டமே உருவாகிக் கொண்டிருக்கின்றதென்பது இந்த அடையாள வேலை நிறுத்தத்தின்மூலம் நன்கு புலனாகிறது.

### கும்பாபிஷேகம்

இங்கு பிரதான வீதியில் அமைந்துள்ள சமாஜப் பிள்ளையார் ஆலயத்திருப்பணிகளைச் சில சைவப்பிரமுகர்கள் மேற்கொண்டுள்ளார்கள். ஆலயப் புனருத்தாரண வேலைகள் முற்றுப் பெற்று இங்கு கும்பாபிஷேகமும் நடைபெறவிருக்கிறது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தார் சார்பில் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு மார்ச் மாதம் 12-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org